மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 10 வியாழக்கிழமை (27— 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 336

# காமினியின் படுகொலைக்கு சூத்திரதாரி யார்?

# இப்போதைக்கு கண்டுபிடிப்பது கடினம்!

## பொலீஸ் மா அதிபர் கருத்து

கொழும்பு, ஒக்ரோபர் 27

காமினி திஸாநாயக்கா மற்றும் அரசியல்வாதிகளை யார் கொலை செய்தார்கள், சூத்திரதாரி யார் என்பவற்றையும் கண்டு பிடித்து, இப்போதைக்கு ஒரு முடிவுக்கு வர முடியாது. அது மிகவும் கடினமானதாகும்.

இவ்வாறு பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித் திருக்கிறார்.

இக்கொலையின் பின்னால் உள்ள சதி நோக்கம் என்ன என்பதற்கான ஆதாரங்களைக் கண்டறிய முடிந்தால் மட்டுமே தீர்க்கமான இறுதி முடிவுக்கு வரமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றிரவு பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இவ்வாறு கூறினார்.

பொலீஸ் மா அதிபர் தமது பேட்டியில் தெரிவித்த கருத்துக்களும் தகவல்களும் வருமாறு:—

நாம் இப்போது எமது விசாரணைகளை, இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்காரரே நடத்தியிருக்கிறார் என்ற அடிப்படையிலேயே நடத்தி வருகிறோம்.

ஆகையால் முதலில் அந்தத் தற்கொலையாளியை அவர் யார் என்பதனை அடையாளம் காணவேண்டும்.

அவ்வாறு தற்கொலையாளியை இனங்கண்டாலும், அவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆதாரபூர்வமாக நிரூபிக்கவேண்டும்.

தற்கொலையாளி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இருந்தவர் என்று நிறுவினாலுங்கூட—

விடுதலைப் புலிகள் ஓர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு மிரட்டல்! வாகனம் மீது கல்வீச்சு!!

கொழும்பு, ஒக். 27

முன்னாள் பிரதமரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ரணில் விக்கிரமசிங்காவை நேற்று முன்தினம் ஐ.தே.க. தலைமையகமான ஸ்ரீ கோத்தாவுக்கு முன்பாக வைத்து சிலர் மிரட்டியதாக பொலீஸில் முறைப்பாடு செய்யப் பட்டிருப்பதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

திரு. விக்கிரமசிங்காவின் வாகனத்தை நோக்கி அவர்கள் கற்களை வீசி அதன் கண்ணாடிகளை உடைத்ததாகவும் திரு. விக்கிரமசிங்காவுக்கு எதிராக சுலோகங்களைக் கூறிக்கொண்டு ஊர்வலமாக சென்றதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீகோத்தாவுக்கு முன்னால் கூடியிருந்தவர்கள் ரணில் விக்கிரமசிங்காவுக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கும் விதமாக நடந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ஐ-4)

## தலைநகர் கொழும்பில் கடும் பாதுகாப்பு ஏற்பாடு

### முப்படையினரும் உஷார்

கொழும்பு, ஒக். 27

கொழும்பு நகரில் முப்படையினரும் கூட்டாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலீஸாரின் ரோந்தும் பாதுகாப்புப் படையினரின் சோதனை நடவடிக்கைகளும் கடந்த இரு நாட்களாகத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நகரின் முக்கிய இடங்களில் கலகத் தடுப்புப் பொலீஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

கண்ணீர் புகைக் குண்டுகள் சகிதம் பொலீஸார் எங்கும் பெரும் எண்ணிக்கையில் காணப்படுகின்றனர்.

கோட்டை, புறக்கோட்டை மருதானை பகுதிகளிலேயே தீவிர பாதுகாப்பு போடப் பட்டுள்ளது.

இராணுவ, விமானப்படை கடற்படை சிப்பாய்கள் இரும்புத் தொப்பி அணிந்தவர்களாக நகரில் எங்கும் காணப் படுகின்றனர்.

இதேவேளை — காலஞ்சென்ற காமினி திஸாநாயக்காவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வீடுகள் கடைகள் மற்றும் பொது இடங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

(ஒ-ஐ)

## கொட்டாஞ்சேனையில் 8 இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஒக். 27

காமினி திஸாநாயக்காவின் படுகொலையை அடுத்து பொலீஸார் கொட்டாஞ்சேனையில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த எட்டு இளைஞர்களை கைதுசெய் துள்ளனர்.

அவர்கள் கொடுத்த தகவல்களின் பேரில், அந்த விடுதியில் இருந்து வெளியேறிய ஒரு யுவதி மற்றும் இளைஞர் ஒருவரின் விவரங்களைத் திரட்டுவதில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## அரசு - புலிகளுக்கு இடையிலான சதியே காமினியின் படுகொலை!

### முகம்மது குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 27

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சதியின் ஓர் அங்கமே காமினி திஸாநாயக்காவின் படுகொலை.

முன்னாள் சபாநாயகர் எம். எச் முகம்மது முன்கண்டவாறு செய்தியாளர் மாநாட்டில் குற்றஞ்சுமத்தினார்.

கைது செய்யப்பட்டிருந்த விடுதலைப் புலிகளை விடுதலை செய்ததன் மூலமும் —

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதியில் இருந்து மக்கள் தாராளமாக வர அனுமதித்ததன் மூலமும் சந்திரிகாவின் அரசு தலைநகர் கொழும்பில் விடுதலைப் புலிகள் சுதந்திரமாக இயங்க வழிவகை செய்து கொடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்

விடுதலைப்புலிகளுடன் சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு உறவாவடுதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பாதுகாப்பு அமைச்சின் எச்சரிக்கைக்கு மத்தியிலும் காமினி திஸாநாயாக்காவுக்கு போதுமான பாதுகாப்பை அளிக்க சந்திரிகா அரசு தவறிவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ. தே. க. வின் ஜனாதிபதி வேட்பாளராக சிறிமா திஸாநாயக்கா ஏகமனதாகவே தெரிவு செய்யப்பட்டார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. குற்றச்சாட்டை அரசு நிராகரித்தது!

கொழும்பு, ஒக். 27

காமினி திஸாநாயக்காவின் கொலைக்கு இலங்கை அரசுதான் பொறுப்பு என்று ஐ. தே. க. தெரிவித்துள்ள குற்றச்சாட்டை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு திட்டவட்டமாக நிராகரித் துள்ளது.

தகவல்துறை அமைச்சர்

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உவர் முகம்மது காக்கா என்ன உளறிக் [illegible] டு றார்...!

## சமாதானப் பேச்சுக்கள் கைவிடப்படவில்லை

### கேணல் ரத்வத்தை தகவல்

கொழும்பு, ஒக். 27

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை முழுமையாகக் கைவிடப்படவில்லை.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை முன்கண்டவாறு செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

காமினி திஸாநாயக்காவின் படுகொலைச் சம்பவத்தை அடுத்து விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகள் தற்காலிகமாகத்தான் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

(ஒ—எ)

### விளையாட்டு வினையானது:

## தந்தை 3 குழந்தைகள் ஷெல் வெடித்து காயம்

யாழ்ப்பாணம், ஒக். 27

ஷெல்லை நிலத்தில் குத்திய போது அது பயங்கரமான சத்தத்துடன் வெடித்தது. ஷெல்லைக் குத்திய சிறுவன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம் அடைந்தனர்.

ஷெல்லைக் குத்திப்பார்த்த ர. ரவீந்திரன் (வயது 6) என்ற சிறுவனின் வலது கை மணிக்கட்டுடன் துண்டிக்கப் பட்டது. அவரது வலது கண்ணும் பாதிக்கப்பட்டது.

சிறுவனின் தந்தையாரான குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதியைச்சேர்ந்த இராசரத்தினம் ரவீந்திரபாலன் (வயது 36), சிறுவனின் சகோ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.மு. - ஐ.தே க. ஆதரவாளர்கள் மோதல்

கொழும்பு, ஒக். 27

காமினி திஸாநாயக்காவின் படுகொலையை அடுத்து நாட்டின் வெவ்வேறு இடங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு இடையே மோதல்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதல்கள் தீவிரமடையாமல் இருக்கவே இரவுநேர ஊரடங்குச்சட்டம் அமுல் நடத்தப்படுவதாக பாதுகாப்பு பிரதிஅமைச்சர்கேணல் அனுருத்த ரத்வத்தை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரதமர் சந்திரிகாவுக்கு எதிராகச் சில இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இரு கட்சிகளின் ஆதரவாளர்கள் இடையே இடம் பெற்றுவரும் சிறுசிறு மோதல்கள் இன மோதலாக மாறுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கூடியவரை பிரசாரக் கூட்டங்களை தவிர்ப்பார் சிறிமா திஸாநாயக்கா!

கொழும்பு, ஒக். 27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக போட்டியிட புதிதாக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சிறிமா திஸாநாயக்கா பெரும் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றையே திருமதி திஸாநாயக்கா தமது பிரசாரங்களுக்கு அதிகபட்சமாக பயன்படுத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அவர் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வதை தவிர்க்க முடிவு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-6)

## ஊரடங்கை உடன் நீக்காவிட்டால் ஐ. தே. கட்சியினர் அதனை மீறுவர்!

### டாக்டர் விக்கிரமசூரிய எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 27

''அரசாங்கம் தற்போது ஊரடங்கை அமுல் செய்வது காமினியின் பூதவுடலுக்கு தூர இடங்களில் உள்ள மக்கள் வந்து அஞ்சலி செலுத்துவதைத் தடை செய்வதற்கேயாகும்.

''எனவே அரசு ஊரடங்குச் சட்டத்தை பூரணமாக நீக்க வேண்டும். இல்லாவிடின் ஐ. தே.கவினர் வீதிகளில் இறங்கி ஊரடங்கை மீறுவர்'

— இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் கொல்லப்பட்ட காமினியின் மைத்துனரான டாக்டர் விக்கிரம வீரசூரிய.

இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரையான இரவு நேர ஊரடங்கை அரசு தொடர்ந்து அமுல் செய்வது தெரிந்ததே.

இதற்கிடையில் —

ஊரடங்குச் சட்டத்தை மீறுவதென்று ஐ. தே. க. முடிவு செய்யவில்லை என்று கட்சியின் பொதுச் செயலாளர் தஹம் விமலசேன பி. பி.ஸிக்கு தெரிவித்தார்.

(உ-6)

### 30 முதல் 40 'நொட்' வேகத்தில் செல்லக்கூடிய

## புலிகளிடம் அதிவேகப்படகு: கடற்படையினருக்கு அச்சம்

கொழும்பு, ஒக். 27

கடற்புலிகளிடம் 30 முதல் 40 ''நொட் வேகத்தில் செல்லும் அதிவேகப்படகு இருப்பது குறித்து ஸ்ரீலங்கா கடற்படை பாரதூரமாகக் கருதுவதாக ''சண்டே ஒப்சேர்வர்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

பருத்தித்துறையில் இருந்து தலைமன்னார் வரையான கடலோரப் பகுதியில் இப்படகு ஒன்றின் நடமாட்டத்தை கடற்படையினர் அவதானித்துள்ளனர் என்றும்—

கடற்படையினரிடம் இருக்கும் அதிவேக இஸ்ரேலிய தயாரிப்பான [illegible] பீரங்கிப் படகின் [illegible] நிகராக கடற்புலிகளிடம் உள்ள படகின் வேகம் காணப் பட்டது.

ஒருவர் அல்லது இருவரால் இயக்கப்படும் இப்படகு அதிவேக கலனாக அல்லது ''Water Scooter'' ஆக இருக்கக்கூடும். [illegible] கடற்படையின் [illegible] பாட்சார்த்த ஓட்டத்தில் ஈடுபட்டிருப்பது போன்று காணப்பட்டது.

எப்படியிருந்தபோதிலும்— இப்படி ஒரு படகு கடற்புலிகளிடம் இருப்பதன் முக்கியத்துவத்தை, கடந்த காலங்களில் 13 கடற்படைப் படகு [illegible] விடுதலைப் புலிகளிடம் இழந்த கடற்படையினர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எவர் எச்சரித்தாலும் ஊரடங்கை நீக்கோம்!

### அனுருத்த அறிவிப்பு

கொழும்பு, ஒக். 27

எவர் எச்சரித்தாலும் ஊரடங்குச் சட்டத்தை நீக்கப் போவதில்லை.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று முன் கண்டவாறு தெரிவித்தார்.

ஊரடங்குச்சட்டத்தை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

எவரும் இனக்கலவரத்தை ஏற்படுத்துவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## படையினர் சூடு; கல்மடுவாசி காயம்

யாழ்ப்பாணம், ஒக். 27

வவுனியா கோழியாகுளம் பகுதிக்கு ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டிருந்த இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று அதிகாலை 12.45

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனைப் போன்ற ஒரு மாவீரரை சிங்களபௌத்தரால்காட்டமுடியாது

## சண்டே ஒப்சேர்வரில் அமரதாஸ பெர்னாண்டோ

''சமாதானத்துக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்''— என்ற தலைப்பில் அமரதாஸ பெர்னாண்டோ எழுதி கடந்த வார சண்டே ஒப்சேர்வரில் வெளியான கட்டுரையில் இருந்து சில பகுதிகள் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

தமது மருகரான முன்னாள் இராணுவ தளபதி பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்காவுக்கு விடுதலைப் புலிகளை அழிக்க ஆறு மாதகால அவகாசம் கொடுத்தார் அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனா.

பிரிகேடியர் புளுகினார், ''ஐயா, மூன்று மாதங்கள் போதும்''— என்று.

பதினொரு ஆண்டுகள் கழிந்துவிட்டன. என்றுமே இல்லாதவாறு விடுதலைப் புலிகள் பலம்பொருந்தியவர்களாக இன்று உள்ளனர்.

இருந்தும் எம்மிடையே உள்ள இனவாதிகள், கடந்த காலவரலாற்றில் இருந்து பாடம் படிக்கவில்லை என்று தெரிகிறது.

அவர்கள் இப்பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாகமட்டுமே காண்கிறார்கள், இனப் பிரச்சினையாக அல்ல. யுத்த வெறியர்கள் விடுதலைப் புலிகளை அழிக்கும் ராணுவப் பிரச்சினையாகவே இதைப் பார்க்கின்றார்கள்.

பதினொரு ஆண்டுகளில் இளம் அரும்புகள் இரத்த வெள்ளத்தில் அழிந்து போயினர்.

இன்றைய சிங்கள இனவாதிகள் நிலைமையை தங்களுக்கு ஏற்றவிதத்தில் திரிபுபடுத்தும் முயற்சியில் தோற்றுப் போய்விட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவு உண்டு. சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் போராடுகின்றனர்.

செல்வநாயகத்துடன் ஓர் உடன்பாட்டுக்கு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா வருவதை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதமிருந்த 'சிங்கள தேசபக்தர்களான எப். ஆர். ஜயசூரியா' கே. எம். பி. ராஜரத்னா ஆகியோரின் போலித்தனத்தை வெளிப்படுத்துகின்றேன். ஸ்ரீலங்காவில் உண்ணாவிரதமிருப்பது என்பது ஒரு கேலிக்கூத்து.

**மாவீரனான திலீபன்**

திலீபனை எடுத்துக்கொள்ளுங்கள். உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்து மாவீரரானார். அப்படி ஓர் உதாரணம் காட்டி பெருமை பேசுவதற்கு எமது சிங்கள பௌத்தர்களால் எவரையும் காட்ட முடியாது.

இன்றைய தேவை சமாதானமே என்று ஓய்வுபெற்ற இராணுவ பிரிகேடியர் நாரத விக்கிரமரத்னா கூறியிருக்கிறார். இதனை ஏற்றுக்கொள்வது கடினமாக இருப்பினும் உண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார். (ஐ-எ)

# நாம் பேச்சுவார்த்தை ஆரம்பித்தது தேர்தலை எதிர்பார்த்து அல்ல

## 'திவயின' வார இதழுக்கு சந்திரிகா பேட்டி

கொழும்பு, ஒக். 27

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது ஜனாதிபதித் தேர்தல் பற்றி ஒரு வசனம் கூடப்பேசப்படவில்லை. நாங்கள் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது தேர்தலை எதிர்பார்த்து அல்ல. வடக்கின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற நேர்மையான எண்ணத்துடன்தான் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தோம்.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா ''திவயின'' வார இதழுக்கு வழங்கியுள்ள பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தது, ஜனாதிபதி தேர்தலை வடக்கில் நடத்த முடியுமா என்ற சாதக நிலைமையை அறிவதற்காகத்தானே? என்று திவயின செய்தியாளரான தயா லங்காபுர கேட்ட கேள்விக்கு பதிலளித்த போதே சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நடைபெற்று உள்ள சமாதானப் பேச்சுக்கள் பற்றி நீங்கள் திருப்தி அடைந்துள்ளீர்களா? என கேட்கப்பட்ட போது,

சமாதான பேச்சுக்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது மட்டும் தான். நாங்கள் இதுவரை வடக்கில் செய்யப்படக்கூடிய புனர் நிர்மாணம் புனரமைப்பு தொடர்பாகத்தான் பேசியிருக்கிறோம். இதுவரை நடைபெற்ற பேச்சுக்கள் மகிழ்ச்சியை தந்துள்ளன என்றார்.

கேள்வி; பேச்சுவார்த்தைகள் சாதகமாக அமைந்து வடக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்திய பின் வடபகுதி மக்களின் தலைவராக பிரபாகரனை ஏற்றுக் கொள்வீர்களா?

பதில்: அது வடபகுதி மக்களினுடைய காரியமாகும். அது எங்களால் செய்ய முடியாத ஒன்று. அரசாங்கத்தால் தலைவரை தோற்றுவிக்க முடியாது. மக்கள் ஜனநாயக முறைப்படி யாரை ஏற்றுக் கொள்ளுகிறார்களோ அவரை நாமும் ஏற்றுக் கொள்வோம்.

கேள்வி: இவ்வாறான முடிவினால் அரசுடன் செயலாற்றும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுக்கு கேடுகள் ஏற்படுமா?

பதில்: எங்களால் வடபகுதி மக்களின் முடிவை மட்டுமே ஏற்றுக் கொள்ள முடியும். (இ-9)



## சேவைநலம் பாராட்டு

37 வருட ஆசிரிய சேவையில் 24 வருடங்கள் யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் சிறப்புறச் சேவைபுரிந்து ஓய்வுபெற்ற

**திரு. கந்தையா பசுபதி**

அவர்களை மனதாரப் பாராட்டுகிறோம்.

கடந்த 10 வருடங்களாக எமது பாடசாலையில் சிறந்த சேவையாற்றி ஓய்வுபெற்ற ஆசான்

**திரு. ஐ. சிங்கராஜா**

அவர்களையும் மனதாரப் பாராட்டுகிறோம். பாராட்டு வைபவம் இன்று நண்பகல் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை
(33536)


யாழ்ப்பாணக் கல்லூரி வணிகமன்றச் சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக

**யாழ். நாட்டார் வழக்கியற் கழகம்**

வழங்கும்

(அகில இலங்கை ரூபவாஹினி, வானொலிப் புகழ்)

**காத்தவராயன்**

(சிந்து நடைக் கூத்து)

நெறியாள்கை: பேராசிரியர் இ. பாலசுந்தரம்
வழங்குபவர்; பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தலைவர், நாட்டார் வழக்கியற் கழகம்)
இடம்: யாழ். கல்லூரி ''ஒட்லி'' மண்டபம்
காலம்: 28 — 10 — 1994 வெள்ளி பி. ப. 5 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நுழைவுச் சீட்டுக்கள் மண்டபவாயிலில்

விளம்பர அன்பளிப்பு:

**புதிய சாந்தி அரைக்கும் ஆலை**

சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
(7978)


## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. ஞானராசா அடிகளாரின் தந்தை

**ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ்லோஸ்**

(மிருசுவில்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

மயிலிட்டி.

குணம் கிறீம் கவுஸ்
பிரதான வீதி,
சுன்னாகம்.
(7683)

### எதிர்காலத் தாக்குதல்களை திட்டமிடுவது எப்படி?

# ஆயுதக்கொள்வனவு நிறுத்தத்தினால் படைத்தளபதிகளிடையே குழப்பநிலை

கொழும்பு, ஒக். 27

ரஷ்ய ஆயுதக் கொள்வனவு உடன்படிக்கையை பொ. ஐ. மு. அரசு இரத்துச்செய்ததனால் முப்படைகளின் தளபதிகளும் குழப்ப நிலையில் உள்ளனர் என்று தெரிவிகப்படுகிறது.

எதிர்காலத்தாக்குதல்களை நடத்தும் திறமையை எப்படி சட்டி எழுப்புவது என்பதே அந்த குழப்பநிலைக்கு காரணம் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ரஷ்ய ஆயுதக்கொள்வனவு ரத்து, இராணுவத்துக்கு சில நன்மைகளை ஏற்படுத்தியிருப்பதாக தெரிகிறது என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன

ரஷ்ய ஆயுதக்கொள்வனவு உடன்படிக்கையின் பேரால் ஏற்கனவே சம்பந்தப்பட்ட ரஷ்ய நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி மூன்று படைகளும் தங்களுக்குத் தேவையான போர்த்தளபாடங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் கொழும்புச்செய்திகள் தெரிவித்தன.

அந்த உடன்படிக்லகயின் கீழ் இராணுவம் 16 பி. எம். பி- 25 கவச துருப்புகள் ஏற்றிச் செல்லும் வாகனங்களை ஏற்கனவே இறக்குமதி செய்துவிட்டது.

எனினும்— இக்கவச வாகனங்களுக்குத் தேவையான உதிரிப்பாங்களும் வெடிப்பொருள்களும் இன்னும் இடைக்காததனால், இவற்றின் பயன் குறித்து சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

# மணற்காட்டில் இன்று சவுக்கு நடுகை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 27

பாலையைச் சோலையாக்கும் முயற்சியின்ஓர் கட்டமாக மணற்காடு சூழல் பாதுகாப்பு நிறுவனத்தால் 200 ஏக்கர் சவுக்கம் காடு வளர்ப்புத் திட்டம் இன்று (வியாழன்) ஆரம்பிக்கப்படவுள்ளது.

வேருன்றும் நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை 9-30 மணிக்கு மணற்காட்டில் நடைபெறும்.

சூழல் பாதுகாப்புப் பகுதி பொது முகாமையாளர் திரு மு. உமைநேசன் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச் செல்வனும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றுவார்

கடற்புலிகளின் விசேட தளபதி திரு. [illegible] வது சவுக்கம் கன்று நடுகை செய்வார்.

சூழல்பாதுகாப்பு, நிறுவனம் ஆயிரம் ஏக்கரில் 12 லட்சம் மரங்களை நடுவதற்கு திட்டமிட்டுள்ளது தெரிந்ததே. அத்திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு வருடத்தில் 45ஏக்கரில் சவுக்கும், 10 ஏக்கரில் தென்னையும் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த வருடம் 200ஏக்கரில் சவுக்கும், 50 ஏக்கரில் தென்னையும் நட இட்டமிடப்பட்டுள்ளது.

பாலையைச் சோலையாக்கும் முயற்சியில் மேற்படி 200ஏக்கர் சவுக்கு நடுகை மூன்றாவது கட்டமாகக் கருதப்படுகின்றது.

இத்திட்டத்திற்குத் தேவையான இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட கன்றுகள் உற்பத்தி செய்தல் உட்பட சகல [illegible] யடைந்துள்ளன. (இ)

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இஸ்ரேல் - ஜோர்தான் ஒப்பந்தம்

## நேற்று கிளின்ரன் முன்னிலையில் கைச்சாத்து

அறபா, ஒக். 27

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இஸ்ரேல் — ஜோர்டான் சமாதான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

செங்கடலுக்கு அருகில் ஜேர்டான் இஸ்ரேல் எல்லைப் புறத்தில் அறபா என்ற இடத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இஸ்ரேலிய பிரதமர் யிட்ஷாத் ரபினும் ஜோர்டான் மன்னர் ஹுசேய்னும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

சுமார் 46 கால வருடமாக இடம்பெற்று வந்த இஸ்ரேல்-ஜோர்டான் யுத்த நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவத்தில் பல வெளிநாட்டு ராஜதந்திரிகளும் கலந்துகொண்டனர்.

இஸ்ரேல் கைப்பற்றிய சில பகுதிகளை மீண்டும்ஜோர்டானிடம் ஒப்படைப்பது ஜோர்டானின் சில பகுதிகளை இஸ்ரேலிடம் குத்தகைக்கு விடுதல் போன்ற அம்சங்கள் இந்த ஒப்பந்தத்தில் இடம் பெறுகின்றன. (இ-4)

# விமானப் படையின் 'ஹெலி' பிரிவு விஸ்தரிப்பு

கொழும்பு, ஒக்.27

ஸ்ரீலங்கா விமானப் படையின் ஹெலிக்கொப்டர் பிரிவு விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

ரஷ்ய தயாரிப்பான எம். ஐ. 17 ரக ஹெலிகள் மூன்று விமானப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 25 பேரை ஏற்றிச் செல்ல வசதிகள் உள்ளன. இவை உக்ரெய்ன் நாட்டில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

இதே வேளை—

அமெரிக்கத் தயாரிப்பான பெல் 212 ஹெலிகளே படையினர் மத்தியில் பிரபலம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. படையினர் அதனை ''ஆகாய ஜீப்'' என்றே அழைத்து வருகின்றனர்.

வடக்கு-கிழக்கில் தற்போது படையினரை ஏற்றி இறக்குவது மற்றும் தாக்குதல் வேவு நடவடிக்கைகளில் இந்த பெல் 212 ஹெலிகளே தற்சமயம் பயன்படுத்தப்படுகின்றன. (ஐ)

## பிளாம்பயான் கப்பல் பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஒக். 27

இன்று பிளாம்பயான் கப்பல் மூலம் கொழும்பு செல்லத் தெரிவு செய்யப்பட்டு, அக்கப்பல் சேவை நடைபெறாததால் கொழும்பு செல்ல முடியாமற்போன நோயாளர்களையும் அவர்களுடன் கூடச் செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலைக்கு வருமாறு பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளது.

மேலும் நவம்பர் 10 ஆம் திகதி நடைபெற வேண்டிய மேற்படி கப்பல் சேவை நவம்பர் 5ஆம் திகதி அல்லது 7 ஆம் திகதி நடைபெறலாம் என்பதால் வைத்திய நிபுணர்களினால் கொழும்பு செல்வதற்கு சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களையும் கூடச் செல்பவர்களையும் உரிய ஆவணங்களுடன் இம்மாதம் 31 ஆம் திகதி திங்கள் காலை 9 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலைக்கு வந்து பதிவு செய்து கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

# இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 27

தமிழீழ நிர்வாக சேவையினால் இன்று நடத்தப்பட உள்ள விசேட கலந்துரையாடல்கள் வருமாறு:-

★ பனை அபிவிருத்திச் சபை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பனை அபிவிருத்திச்சபை மண்டபத்தில் காலை 10 மணிக்கு.

★ செயலகத்தின் சகல திணைக்களங்களின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் காலை 10 மணிக்கு நாவலர் மண்டபத்தில்.

★ வீதி அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கட்டடத் திணைக்களம், கட்டட அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவை திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் காலை 11-30மணிக்கு நாவலர் மண்டபத்தில்.

★ யாழ். கோட்டம்—சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பகல் 1-00 மணிக்கு மத்திய கல்லூரியில்.

★ நல்லூர் கோட்டம் சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பகல் 1-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில்.

★ வேலணை, ஊர்காவற்றுறை கோட்டம் சகல அதிபர் ஆசிரியர் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பகல் 1-00 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி எதிரில் உள்ள ஊர்காவற்றுறை சென் அன்தனிஸ் பாடசாலையில.

★ தபால் திணைக்களம், தொலைத்தொடர்பு திணைக்களம், மின்சாரசபை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 3 மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டத்தில். (இ)

## பூச்சி தடுப்பு மருந்து இலவசம்

புத்தூர் பகுதி மக்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு பூச்சி தடுப்பு மருந்து இலவசமாக வழங்கப்பட உள்ளது.

யாழ் றோட்டறிக் கழகத்தின் ஆதரவில் புத்தூர் அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்து டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்டு பூச்சி தடுப்பு மருந்து வழங்கப்படும்.

இரண்டாவது தடவையாக புத்தூர் மக்களுக்கு பூச்சி தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது. (அ)

★ ★ ★

யாழ், மிட்-ரவுண் றோட்ரறக்ட் கழகத்தினர் இன்று காலை 10.30 மணியளவில் நாவாந்துறை பாடசாலையில் இலவச பூச்சி மருந்து வழங்கும் செயல்திட்டம் ஒன்றினை செய்யவுள்ளனர். இதன்மூலம் சுமார் 350 பாடசாலை மாணவர்கள் பயன்பெறவுள்ளனர்.

## பெரிய மடுவில் பழ மரக்கன்று விநியோகம்

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாய /சூழல் பாதுகாப்பு பகுதியினரால் பெரிய மடுவில் உருவாக்கப்பட்டுள்ள மேஜர் ஜஸ்மின் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட பழமரக்கன்றுகள் தற்போழுது அங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பலா, தேசி, தோடை, கொய்யா, பப்பாசி போன்ற பழ மரக்கன்றுகளும் சூழல் பாதுகாப்பை யொட்டி நடுகை செய்யக்கூடிய வன மரக்கன்றுகளும் விநியோகம் செய்யப்படுகின்றன.

மக்களின் நலன் கருதியும்— பழ மரக்கன்றுகளின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும்— தரிசாக இருக்கும் காணிகளில் பழமரக்கன்றுகளை நடுகை செய்வதற்கும் குறைந்த விலையில் கன்றுகள் பொதுமக்களுக்கு நியாய விலைக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. (இ)

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 27

ஊர்காவற்றுறை ப.நோ. கூ.சங்கம் பாவனையாளர்களுக்கான 19 ஆவது சுற்று 4 லீற்றர் மண்ணெண்ணெயை இன்று முதல் வழங்குகிறது.

# தமிழ் மக்களின் தலைவராக பிரபாவை அரசு ஏற்குமா?

## சந்திரிகாவிடம் ''ஐலண்ட்'' கேள்வி

கொழும்பு, ஒக். 27

வடக்கு — கிழக்கில் சமாதானம் ஏற்பட்டு ஜனநாயக சூழ்நிலை ஏற்படுமிடத்து தமிழ் மக்களின் தலைவராக திரு. பிரபாகரனை ஏற்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு தயாராக இருக்கிறதா?

இக் கேள்விக்கான பதிலை பிரதமர் சந்திரிகா ''சண்டே ஐலண்டு'' க்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

பிரதமரின் பதில் வருமாறு;

மக்கள்தான் தங்கள் தலைவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். இப்படியான விஷயங்களில் அரசு முடிவு செய்யாது. ஜனநாயக சூழலில் மக்கள்தான் இதனைச் செய்ய வேண்டும். மக்களின் தெரிவை நாம் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும் ''.


**தவம் இயந்திரவியல் தொழிலகம்**

பலாலி வீதி, கோண்டாவில்

வியாபாரிகளே, வாடிக்கையாளர்களே!

குழாய்க்கிணறுகளுக்குரிய பல்வேறு விதமான புட்வால்வுகளையும் கப்ளிங், நிப்பிள் போன்றவற்றையும் கைப்பம்புகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(7677)


## யா/இந்துமகளிர் கல்லூரி நிலைய 2ஆம் வருட கல்வி டிப்ளோமா

இந்நிலையத்தில் 2ஆம் வருட கல்வி டிப்ளோமா நெறியைப் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான செயல்திட்ட கலந்துரையாடல் ஒன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 30-10-1994 ஞாயிறு காலை 9 மணிக்கு இடம்பெறும் என மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள் அறியத்தருகிறார்கள். தவறாது சமுகம் தரவும்.

மாணவர் அமைப்பு பிரதிநிதிகள்
(33535)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படை முகாம்களின் கடல் வழி தொடர்பை துண்டிப்பதில் புலிகள் வெற்றி அடைவர்

## 'சண்டே ஐலண்ட்'டில் ஜெஹான் பெரேரா

கொழும்பு, ஒக். 27

யாழ்ப்பாணத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற முதற் கட்டப் பேச்சுகளின் போது, மாநாட்டு மண்டபத்தில் விடுதலைப் புலிகளின் கொடி வைக்கப்பட்டிருந்தது வட பகுதியை உண்மையில் யார் ஆளுகின்றனர் என்பதை நினைவுபடுத்துகிறது.

ஜெஹான் பெரேரா ''சண்டே ஐலண்ட்'' இதழில் ''விடுதலைப் புலிகளின் நோக்கம் குறித்து கனவுகாண வேண்டாம்'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தை மண்டபத்தில் விடுதலைப் புலிகள் கொடி இருந்தது தற்செயலானது அல்ல; அது ஒரு சிறிய விஷயமும் அல்ல. விடுதலைப் புலிகளின் நீண்ட நாள் நோக்கத்தை வைத்து அதனை பார்க்க வேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்தும்போது விடுதலைப் புலிகளின் பிரதான நோக்கம் என்ன என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பலஸ்தீன் விடுதலை இயக்கம், ஐரிஷ் விடுதலை இராணுவம் ஆகியன போன்றல்லாது, விடுதலைப் புலிகள் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றனர். ''சாகரவர்த்தனா'' கடற்படைக் கப்பல், ''ஓஷன் டிரேடர்'' கப்பல் ஆகியன விடுதலைப் புலிகளினால் மூழ்கடிக்கப்பட்டமை இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் ஈழம் காண்பது என்ற விடுதலைப் புலிகளின் நோக்கத்தையே இன்னும் காட்டுகின்றது.

வடபகுதி இராணுவ முகாம்களுக்கான தரை வழித் தொடர்புகளை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகத் துண்டித்து விட்டனர். பேச்சுவார்த்தை இருந்தாலும், இல்லாவிட்டாலும் வடபகுதி இராணுவ முகாம்களுடனான கடல் வழித் தொடர்பை துண்டிக்கும் முயற்சி தொடருகின்றது.

மெதுவாக, ஆனால் நிச்சயமாக விடுதலைப் புலிகள் இந்த இலட்சியத்தை அடைவார்கள். தமிழ்ஈழத்துக்கு மாற்றீடாக நிலைக்கக்கூடிய தீர்வு ஒன்றை ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருப்பதாக விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் பகிரங்கமாகக் கூறியுள்ளது.

நிலைக்கக்கூடிய மாற்றுத் தீர்வு என்று விடுதலைப் புலிகள் மனதில் வைத்து இருப்பது அரசாங்கத்தின் (பெரும்பாலும் சிங்களவர்களின்) மனதில் இருக்கும் திட்டத்துக்கு வேறாகவே உள்ளது. இது குறித்து கனவு காணக் கூடாது. பின்னர் நம்பிக்கைத் துரோகம் என்று எல்லாம் கூறமுடியாது.

40 வருடங்களாக தமிழர்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டு வந்த பாரபட்ச நடவடிக்கைகளும் ஒரு தசாப்தமாக நடந்து வரும் யுத்தமுமே இன்று தமிழீழப் போராட்டமாக உருவெடுத்துள்ளது. இத்தாயகத்துக்காக ஆயிரக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் உயிர்தியாகம் செய்துள்ளனர்; இன்னும் செய்து வருகின்றனர். இப்பெரிய இலட்சியத்துக்காக தற்கொலையும் செய்து வருகின்றார்கள்.

புதிய அரசாங்கம் கடந்த 2 மாதங்களாகக் காட்டும் நல்லெண்ணமும் ஒரு தலைவரின் மீது வைக்கும் நம்பிக்கையும் விடுதலைப் புலிகள் தமது பிரதான நோக்கத்தை மாற்றத் தூண்டும் என்று எண்ணுவது முற்றிலும் ஏற்க முடியாத காரணங்களாகும்.

இவ்வாறு ஜெஹான் பெரேரா தனது சட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

(ஐ-எ)

# தமிழீழ முதனிலை - இளநிலை தேர்வுகள் நவம்பர் நடுப்பகுதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

அடுத்தமாதம் 4ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை நடைபெறவிருந்த தமிழீழ முதனிலை, இளநிலைத் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அந்தப் பரீட்சைகள் அடுத்த மாதம் 14ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை நடைபெறும்—என்றுதேர்வுஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகளின் செயன்முறைத் தேர்வுகள் யாவும் முன்னர் அறிவிக்கப்பட்ட திகதிகளில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நேர அட்டவணை வருமாறு:-

### தமிழீழ முதனிலைத் தேர்வு - 1994

| | | | |
|---|---|---|---|
| 14 — 11 — 1994 திங்கள் | மு. ப. 8-30 — 9-30 தமிழ் மொழி | மு. ப. 10-00 — 11-00 ஆங்கிலம் | மு ப. 11-30 — பி.ப, 12-30 சமயம் |
| 15 — 11 — 1994 செவ்வாய் | மு. ப. 8-30 — 9-30 கணிதம் | மு. ப. 10-00 — 11-00 சுற்றாடல் | — |

### தமிழீழ இளநிலைத் தேர்வு - 1994

| | | | |
|---|---|---|---|
| 15 — 11 — 1994 செவ்வாய் | — | — | மு. ப. 11-30 — பி. ப.1-30 தமிழ் மொழி |
| 16 — 11 — 1994 புதன் | மு. ப. 8-30 — 10-30 கணிதம் | மு. ப. 11-00 — பி.ப. 1-00 சமயம் | — |
| 17 — 11 — 1994 வியாழன் | மு. ப. 8-30 — 10-30 விஞ்ஞானம் | மு. ப. 11-00 — பி.ப. 1-00 வாழ்க்கைத் திறன்/ தொழில்நுட்பப் பாடம் | — |
| 18 - 11 — 1994 வெள்ளி | மு. ப. 8-30 — 10-30 ஆங்கிலம் | மு. ப.11-00 — பி. ப. 1-00 சங்கீதம்/நடனம்/சித்திரம் I, III | பி. ப. 1-30 — 2-30 சித்திரம்-II |
| 19 — 11 — 1994 சனி | மு. ப. 8-30 — 10-30 சமூகக்கல்வி | மு. ப. 11-00— பி. ப. 1-00 பொது அறிவு | — |

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டால்

# புலிகளின் விமான எதிர்ப்புத் திறமை அதிகரிக்கும் என படையினர் கவலை

## 'சண்டே ஒப்சேர்வர்' தகவல்

கொழும்பு, ஒக். 27-

தற்போதைய சமாதானப் பேச்சுகள் முடிவடைந்து இன்னொரு யுத்தம் எதிர்காலத்தில் ஏற்பட்டால் விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்பு மற்றும் கவசவாகன எதிர்ப்புத் திறமை அதிகரித்துக் காணப்படும் என்று இராணுவ அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

'சண்டே ஒப்சேர்வர்' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை— தற்போது கைவிடப்பட்ட இரண்டாவது கட்டப்பேச்சுக்கு வருவதற்கு முன்னர் அரசுக் குழுவைச் சந்தித்துப் பேசிய இராணுவ அதிகாரிகள்,

''தரையில் ஓர் அங்குலக் காணியையும் விட்டுக் கொடுக்க உடன்படாதீர்கள். கைப்பற்றப்பட்ட பிரதேசத்தை படையினர் இழந்து போகக்கூடியதான சலுகைகளை வழங்க உடன்பட்டுவிடாதீர்கள்''— என்று அரசுப் பிரதிநிதிகளிடம் கூறியுள்ளதாக 'சண்டே ஒப்சேர்வர்' மேலும் தெரிவித்துள்ளது.

(இ-எ)

# சூழலை பாதுகாக்கத் தவறினால் நாம் சூழல் அகதிகளாகும் ஆபத்து

நேற்று 26 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி வரையான ஒருவார காலத்திற்கு பாடசாலைகள், பொது நிறுவனங்கள் சூழல் பாதுகாப்பு வாரத்தைக் கொண்டாடுகின்றன. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

எமது பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளும், பொது நிறுவனங்களும் இந்த வாரத்தை சூழல் பாதுகாப்பு வாரமாக அனுஷ்டிக்கின்றன.

பூமியானது இயற்கையின் எழிற் கோலமாக இருந்த நிலைமாறி தொழிற்சாலைக் கழிவுகள், அணுக்கதிர் வீசல்கள், இயற்கைக் காடுகளின் அழிவுகளால் சூழல் மாசடைந்து நோயுற்ற உலகமாகக் காணப்படுகிறது. துரித அபிவிருத்தி என்ற நோக்கில் பாரிய கைத்தொழில், விவசாய, நகரமயமாக்கல் செயற்பாடுகளால் சூழலின் சமநிலை குழப்பப்படுகின்றது.

துரித சனத்தொகை வளர்ச்சி, தேவைகளின் அதிகரிப்பு, விரைவான அபிவிருத்திப் போக்குகள் சூழலை மாசடையச் செய்யும் துக்ககரமான நிலைமைக்கு இட்டுச் செல்ல எத்தனிக்கும் இவ்வேளையில், சூழல் பாதுகாப்பு என்ற எண்ணக்கரு அவசியமாக நோக்கப்பட வேண்டியுள்ளது.

சூழல் பாதுகாப்பு, சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல் என்ற அடிப்படையில் எழுந்து பின்னர், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், பராமரித்தல் நோக்கில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

எமது பிரதேசத்தின் காலநிலை வரட்சித்தன்மை கூடியதாக, குறித்த பருவகால நிகழ்வுகள் நடைபெறாமல் உள்ளமைக்குக் காடுகளையும், மரங்களையும் பெருமளவு அழித்தமையே காரணம் என உணர்த்தப்பட்டுள்ளது.

எனவே பாடசாலை மாணவர்களும், பொது நிறுவனங்களும், எல்லாப் பொது மக்களும் மரங்களை நடுவதில் கட்டாயம் ஆர்வம் காட்ட வேண்டும். யாழ். மாவட்ட பரந்த வெளிகளில் காடுகளை உருவாக்கும் திட்டம் செயற்படுத்தப்படுவது வரவேற்கக் கூடியதே.

நாம் மரங்களை நடுவதில் சூழல் பாதுகாப்புப் பணியில் தொடங்கியுள்ளது. இதனைத் தடுப்பதற்கு உலகளாவிய, பிராந்திய, தேச, பிரதேச, பகுதி ரீதியாகச் சூழலைப் பேணும் நடவடிக்கைகள் மிகவும் அவசியம்.

உலகம் இன்று கைத்தொழில் வளர்ச்சியினூடான நச்சுக் கழிவுப் பொருள்கள், சனத்தொகைப் பெருக்கம், அணுக்குண்டுப் பரிசோதனைகள், நச்சுவாயுக் கசிவுகள், விபத்துக்கள், வரட்சியின் கொடூரம் காரணமாக அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அத்தோடு உயிர் வாழ்வதற்குத் தகுதி அற்ற அசுத்தப்படலமாகவும் மாறி வருகிறது. இதனால் அமில மழையின் தாக்கமும், ஓஸோன் படை அழிவும் அதனால் சூரியனின் தீய கதிர்களின் தாக்கமும் சாதாரணமாகி விட்டது. அதனால் பூமியின் வெப்பம் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

**பா. தனபாலன் (பி. ஏ.)**

காடுகளை அழிப்பதால் புவி மேற்பரப்பில் ஒவ்வொரு ஆண்டும் காபனீர் ஒக்சைட்டு 0.4 சதவீதமும், நைதரசடு மொனோ ஒக்சைட் 0.2 சதவீதமும் அதிகரிப்பதால் வளி மண்டலத்தில் வெப்பம் கூடுகிறது. இந்த வெப்ப உயர்வால் ஒவ்வொரு ஆண்டும் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் சராசரியாக அறுபது லட்சம் ஹெக்டயர் நிலம் பாலைவனமாகின்றது என்ற செய்தியை சூழல் பாதுகாப்பு விஞ்ஞானிகள் [illegible] யுள்ளார்கள்.

அசிரத்தையாக இருந்தோமானால், இயற்கை வளங்கள் அழியுண்டு மண்ணரிப்பினாலும், பாலைவனங்கள் மேலும் விரிவானதாலும் தமது பிரதேசத்தில் வாழ முடியாமல் புதிய இயற்கைச் சூழலைத் தேடி ஓடிக்கொண்டிருக்கும் ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டு மக்களின் நிலை எமக்கும் ஏற்படலாம்.

### சூழல் அகதிகள்

இந்நிலை உயிரின வாழ்க்கைச் சூழல் அகதிகள் என்ற பரிமாணத்தில் உலகின் பல நாடுகளை அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது.

அத்துடன் வெப்பநிலை அதிகரிப்பால் புவி முனைவு பகுதி பனிக்கட்டிகள் உருகி கடந்த நூற்றாண்டில் உலக மா கடல்கள் 10 - 12 சென்ரி மீற்றர் வரை உயர்ந்துள்ளதாயும், தற்போது இது பத்து மடங்கு வேகமடைந்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

### நீரில் மூழ்கும் அபாயம்

இந்நிலையில் புவியின் சிறு தீவுகள், கடற்கரைகள் நீரில் மூழ்கும் அபாயம் பெருகியுள்ளது.

துரித கைத்தொழில், பொருளாதார உறவு உயிரினக் கலாசார வாழ்க்கைச் சூழலைப் பாதிக்கும் ஒன்றாகவுள்ளது. இதைத் தடுக்கவே இன்று பெருமுயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

சூழல் பாதுகாப்பென்பது மானிட உயிர் வாழ்வுடன் ஏனையவற்றை விட நெருக்கமாக உள்ளதால் எல்லா மக்களும் விழிப்படைவது அவசியமாகும். பொதுமக்கள் ஒவ்வொருவரும் இந் நாள்களில் ஒரு மரத்தையாவது நட்டு செயற்பட வேண்டும்.

நமது பூமித்தாயின் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் மனித இனமே அழிந்துவிடும் என்ற உணர்வு பரவலாக ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் ''கிறீன் பீஸ்'' இயக்கம் சூழல் பாதுகாப்பிற்கு அறைகூவல் விடுக்[illegible] வளர்ந்து உலகளாவிய ரீதி[illegible] படுத்தி வருகிறது. ★

## புலிகளின் குரல் வானொலியில்

**27 — 10 — 1994**
**வியாழன் இரவு**

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''தண்ணீர்'' குறு நாடகம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சாவகச்சேரி பொலீஸ் நிலையத் தாக்குதல் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - நாமகள் எழுதிய ''ஆரம்பச் சுவடுகள்''

**28 — 10 — 1994**
**வெள்ளி காலை**

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நாயகப்பாடல்கள்.

### ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.27

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய அனைத்து பிரசாரக் கூட்டங்களும் எதிர்வரும் [illegible]க்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(இ-எ)

திருவள்ளுவருக்கு நாணயம்:

# ராஜராஜ சோழனுக்கு முத்திரை வெளியிடுக

## தமிழக அரசு கோரிக்கை

தமிழ்நாடு, தஞ்சாவூரில் வருகிற ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகும் எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டை ஒட்டி ராஜராஜசோழமன்னனின் படத்துடன் கூடிய தபால் முத்திரையையும், திருவள்ளுவரின் உருவம் பொறிக்கப்பட்ட நாணயத்தையும் வெளியிட தமிழகஅரசு முடிவு செய்துள்ளது-

இம் மாநாடு ஜனவரி 5 ஆம் திகதி வரை நடைபெறும்.

ராஜராஜசோழன் நினைவுத் தபால் முத்திரை, திருவள்ளுவர் நாணயம் ஆகியவற்றை மாநாட்டின் தொடக்க நாளன்று வெளியிடும் படி தமிழக அரசு மத்திய அரசைக் கோரியுள்ளது. (இ-எ)

நூறு வீதம் நம்புவது என்னையே!

# நிதி அமைச்சர் பதவியை நான் கைவிட மாட்டேன்!

## பிரதமர்சந்திரிகாகூறுகிறார்

கொழும்பு, ஒக். 27

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னரும் நிதி அமைச்சர் பதவியை தொடர்ந்து தம்முடனேயே வைத்திருப்பதற்கு பிரதமர் சந்திரிகா விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

''நிதி அமைச்சு முக்கியமானதாகும். இந்த உலகில் நூற்றுக்கு நூறு வீதம் நான் நம்புவது என்னையே''— என்று பிரதமர் சந்திரிகா ''சண்டேஐலண்ட்''பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

சில மாதங்கள் பொறுத்திருந்து பார்த்த பின்னர் அமைச்சரவை மாற்றம் பற்றி சிந்திப்போம் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் வெற்றியீட்டிய பின்னர் பிரதமர் பதவியை யார் ஏற்பர் என்ற கேள்விக்கு—

அதனைக் கட்சியே தீர்மானிக்கும் — என்று பிரதமர் தெரிவித்தார்.

(ஓ-எ)

# திரைப்படத் தயாரிப்பு பற்றி ஐந்து நாள் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஒக். 27

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் திரைப்படப் பிரிவும், நிதர்சனமும் இணைந்து திரைப்படத் தயாரிப்பு பற்றிய ஐந்து நாள் பயிற்சிநெறியை நடத்தவுள்ளன.

திரைப்படப் பிரதியாக்கம், திரைப்பட நடிகர் தேர்வும், திரைப்பட நடிப்பும், அரங்கமைப்பு, ஒப்பனை படப்பிடிப்பு, படத்தொகுப்பு திரைப்படத்தின் ஒலியமைப்பு இசையமைப்பு, சினிமா ஒரு பார்வை ஆகிய விடயங்களில் பயிற்சிநெறி இடம்பெறும்.

பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ள ஆண் - பெண் இருபாலரும் அந்தந்தக் கோட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளரின் சிபார்சுக் கடிதத்துடன் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைகுக்மாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ''பொறுப்பாளர், திரைப்படப் பிரிவு, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், நடுவப் பணியகம், தமிழீழம்'' என்ற முகவரிக்கே அனுப்பப்படல் வேண்டும். (ஐ)

## மீன் பிடிக்க சில பகுதிகளில் படையினர் தடை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோட்டை முனையில் இருந்து கல்லடி வரை மீன் பிடிக்கப் பாதுகாப்புப்படையினர் தடை விதித்துள்ளனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(இ-எ)

## குடிசைகள் புனரமைப்பு

வலிகாமம் மேற்கில் உள்ள அகதி முகாம்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஊரத்தி, வள்ளியம்மை, நீதிவான்வளவு ஆகிய அகதி முகாம்களில் உள்ள குடிசைகள் புனரமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-17)

## இறுதித் தேர்வு

யாழ். இந்துக்கல் லூரி ''செல்ற்'' ஆங்கில நெறிக்கான நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கான இறுதித் தேர்வு நாளை (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3 -00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் சொடுப்பனவுகள் தொடர்பான ஆவணங்களும் பூர்த்தி செய்யப்படவுள்ளன. (இ)

# பண்டிதர் குடியிருப்பில் மலேரியா பரவுகிறது

தென்மராட்சி, ஒக். 27

கிளாலி பண்டிதர் குடியிருப்பில் மீண்டும் மலேரியா பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் இப்பகுதியில் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சுமார் 200 பேர் பரிசோதிக்கப்பட்டனர். அவர்களில் 77 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

கடந்த வருடம் பெய்த பெருமழையினால் இப்பகுதியில் ஆயிரக்கணக்கானோர் மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதும் —

பத்துக்கு மேற்பட்டோர் செப்ரிசிமியா காய்ச்சலால் மரணமானதும் குறிப்பிடத்தக்கது. (இ-17-117)

# குடியிருப்பு திட்டத்திலுள்ள குடிசைகள் புனரமைப்பு

தென்மராட்சி, ஒக். 27

முகமாலை சமுத்திரன் குடியிருப்பில் உள்ள 77 வீடுகள் வேயப்பட உள்ளன.

இதற்கான கிடுகுகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக பளை பிரிவினர் வழங்கியுள்ளனர்.

இதேவேளை முகமாலை பொந்தர் குடியிருப்பில் அமைக்கப்பட்ட 18 வீடுகளின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இயக்கச்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு இவ் வீடுகள் விரைவில் வழங்கப்படும்.

(இ-117)

சுவிஸில் உள்ள

# அகதிகளை அனுப்பும் நடவடிக்கை இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக். 27

புகலிடம் கோரும் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதை சுவிஸ் அரசு இடை நிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்காவும் மற்றும் 60 பேரும் கிரான்ட்பாஸ் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே சுவிஸ் அரசாங்கம் இந்த முடிவை எடுத்திப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இல. 455, ஸ்ரான்லி வீதியில், யாழ். மத்திய பஸ் நிலைய முன்பாக மூன்று அறைகளுடைய கடையும், கிணறு, மலசலகூடமுடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (33430)

## தேவை

சிங்கப்பூரில் வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறிய இந்து சமய பொறியியலாளர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிகள் செய்ய சமையல் அனுபவம், சுத்தம், சுபாவம் ஆகியவை உள்ள பெண் தேவை. மாதச் சம்பளம் 1000/- விமானச்சீட்டு இலவசம். பெயர் சரியான விலாசம் குறிப்பிட்டு உடன் தொடர்பு: இல. 711, உதயன், யாழ்ப்பாணம். (33474)

யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு போட்டோ பிரதி இயந்திரத்தை(Photo Copy Machine) இயக்குவதில்ஆர்வமுள்ளஆண்கள் மட்டும் சுய விவரத்துடன் 5-11-94இற்கு முன் விண்ணப்பிக்கவும். 953, மே/பா உதயன். (சி/9525)

## இயற்கைப் பசளை

மழை பெய்கிறது. நிலமகள் முகம் மலர்கிறது. நீமியா உரமும், சக்தி இயற்கைப் பசளையும் நிலமகளுக்குப் பிரியமானவை. ஊட்டம் அளிப்பவை. கிள்ளிப்போடுங்கள் அவள் அள்ளித்தருவாள். அண்ணாகோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. 'மில்க்வைற்'. (சி-9440)

## பாலர் ஆசிரியராகலாம்

கடைசித் தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் பதிக. பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33496)

## மணமகள் தேவை

யாழ். இந்து, வயது 35, உயரம் 5' 2'', சைவபோசனம், புனர்பூசம் நட்சத்திரம், யாழ்ப்பாணம் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மகனுக்குப் பெற்றோர்பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர். தொழில் புரிபவர் விரும்பத்தக்கது. ஜாதகக் குறிப்புடனும், சகல விவரங்களுடனும் தொடர்பு: இல. 710, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33473)

## பால் விற்பனைக்கு

திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கச்சேரி, கொழும்புத்துறை, நல்லூர், கோப்பாய், கொண்டாவில், தாவடி, கொக்குவில் ஆகிய இடங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வீட்டுக்கு நேரடியாக பால் விநியோகிக்கப்படும். தொடர்பு: பொது முகாமையாளர் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-9438)

## முக்கிய அறிவித்தல்

**A L 94, 95, 96**

பொருளியல் வகுப்புகள் யாவும் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

நன்றி.

ஆசிரியர் **K.** உதயன்

(சி/9536)

## மட்டக்களப்பில் டீஸலுக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் டீஸலை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயி ஒருவர் 24 லீற்றர் டீஸல் எடுத்துச் செல்ல தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ-...)

---

யாழ். மாவட்ட
அரச சார்பற்ற நிறுவனங்களின்
இணையத்தின்
பாலர் கல்வி
ஒருங்கிணைப்புக் குழுவினால்
நடத்தப்படும்

## பாலர் கல்விக்கான கண்காட்சி

இடம்: தமிழர் புனர்வாழ்வுக் கழக பல்துறை பயிற்சியகம், அரசடி வீதி, கந்தர்மடம்.

காலம்: 28, 29, 30-10-1994
காலை 9.00 – 5.00 மணிவரை

சகல பாலர் பாடசாலை ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
கொக்குவில். (33520)

---

கொடிகாமம்
ப. தெ. வ. அ. கூ. சங்கம்
கொடிகாமம்.

## கேள்வி கூற்றுப் பெறல்

மேற்படி எமது சங்கத்தின் த 1-5459 இலக்க (இசூஸ்) லொறியின் உடற்கோப்பு மீள் புனரமைப்பு செய்வதற்கான கூறு விலைகோரப்படுகின்றது. விரும்புவோர் 05-11-94ஆம்திகதிக்கு முன்னதாக நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் பொதுமுகாமையாளர் ப.தெ.வ.அ.கூ.சங்கம் கொடிகாமம் என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். விணணப்பத்தின் உறையின் பக்க மேல் மூலையில் ''உடற்கோப்பு மீள புனரமைத்தல்'' என குறித்து அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: லொறியினை காரியாலய நேரத்தில் எமது சங்கபணிமனையில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
கொடிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கம்,
கச்சாய் வீதி, கொடிகாமம்.

பொது முகாமையாளர்,
ப தெ. வ. அ. கூ சங்கம்,
கொடிகாமம்.

(33529)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

94 பரீட்சை எடுத்த மாணவருக்கான

**DAY CLASS**
(8-00 – 2-00 மணி)

கலை, வர்த்தகம் வகுப்புக்கள்

ஆரம்பம்: **28-10-1994**

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. A. பிரபா |
| பொருளியல் | — | திரு. ராஜேஸ்வரன் |
| வர்த்தகம் | — | திரு. சிவா |

★ முதல் அலகிலிருந்து வினா–விடையுடன் கூடிய மீட்டல் பரீட்சைகளுடன் மீட்கப்படும்.

[சி–9431]

---

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சண்முகம் வேலாயுதபிள்ளை**
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்)

ஆண்டவன் படைப்பில்: 27–05–1927 | அந்நியர் அழிப்பில்: 27–10–1987

திதி: 07 - 11 - 1994

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், இலக்கண இலக்கிய வல்லுநராக வையத்தில் வாழ் வாங்கு வாழ்ந்த தங்களுக்கு இத்தினத்தில் எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(33...)

---

## வேலை வாய்ப்பு

### "தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்"

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விணணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள்:

1. 18 வயதுக்கு மேற்பட்டவராகவும்,
2. க. பொ. த (சாதாரணம்) தரத்தில் தமிழும், கணிதம், எண்கணிதம்/தூய கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்தியுடன் கூடியதாக 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது இதற்கு சமமான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருக்க வேண்டும். க. பொ. த உயர்தரத்தில் பெற்ற பெறுபேறுகளும், வேலை முன் அனுபவமும் விசேட தகைமைகளாக கணிக்கப்படும்.
3. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அதில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி! **12-11-1994**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

பணிப்பாளர்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ அரசியல் துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தாவடி,
தமிழீழம். (சி/9552)

---

பச்சிலைப்பள்ளி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை

## பதவி வெற்றிடம்

கணக்காளர்: 104/10

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடத்திற்குக் கீழ்க் காணும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தாமாகவே விண்ணப்பப் பத்திரங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

1. வயது
   **23** க்கும் **40** க்குமிடைப்பட்டிருத்தல் வேண்டும். (சங்கத்தின் சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

2. கல்வித் தகைமைகள்:
   (அ) கூட்டுறவு ஊழியர் 11-வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் அல்லது கணக்கு வைத்தல் அல்லது கணக்கு ஆய்வாளர் வேலையில் மூன்று (3) வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 12-வது சம்பளத் திட்டத்தில் க/கு புத்தகம் பேணுதல், க/கு ஆய்வாளர் வேலையில் (6) ஆறு வருட அனுபவம்.

   அல்லது

   (ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், பரீட்சை இறுதித் தேர்வு சித்தியடைந்து ஓர் வியாபார நிறுவனம்/கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் / கணக்கு ஆய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்திலான (2) இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் இடைநிலைத் தேர்வில் சித்தியுடன் ஓர் வியாபார நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் / கணக்கு ஆய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் நான்கு (4) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

   அல்லது

   (இ) கூட்டுறவு ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க. பொ. த. உயர்தரம் சான்றிதழ் பரீட்சையில், கணக்கியல் பாடம் உட்பட மூன்று (3) பாடங்களில் சித்தியுடன் ஓர் வியாபார நிறுவனம் அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் ஆறு (6) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

3. வேதனம்:
   ரூபா 1005 — ரூபா 1705/-
   40 X 5 — 50 X 10
   (அத்துடன் கூ. வே. ஆணைக்குழு சட்டப்படி இதர படிகளும் வழங்கப்படும்.)

4. விண்ணப்ப முடிவு திகதி:
   **1994 — 11 — 15** ஆம் திகதி பிற்பகல் 4–30 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள், கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் விண்ணப்பப் பத்திரத்தை பதிவுத் தபால் மூலம் 1994 – 11 – 15 ஆம் திகதி பிற்பகல் 4–30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''பொது முகாமையாளர், பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலும் அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''கணக்காளர் 104/10'' பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.ச.
பளை.

(சி-...)

---

ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை
கொக்குவில்

## பரிசளிப்பு விழா

காலம்: **28 - 10 - 1994** வெள்ளி
நேரம்: பிற்பகல் 1-00 மணி

★ பிரதம விருந்தினர்:
திரு. வ. தானையா அவர்கள்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், நல்லூர் கோட்டம்)

★ பரிசில்கள் வழங்குபவர்!
திருமதி மகேஸ்வரி தானையா அவர்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்தி சங்கம்.

[33533]

---

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயம்

## கேதார கௌரி விரத உற்சவ விஞ்ஞாபனம்

**14-10-1994**ஆம் திகதி ஆரம்பமாகிய கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு தினமும் மேற்படி ஆலயத்தில் கௌரி அம்பிகைக்கு விசேட பூஜைகள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் **03 - 11 - 1994**ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9–30மணியளவில் அம்பிகைக்கு விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து உற்சவம் நடைபெற திருவருள் கூட்டியுள்ளது. உற்சவத்தினைத் தொடர்ந்து விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களுக்கு கௌரிக்காப்பு வழங்கப்படும்.

குறிப்பு: கௌரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் கௌரிக் காப்பு பெற்றுக் கொள்ள விரும்பின் முன் கூட்டியே ஆலய காசாளரிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

தனிக்காப்பு — 40/-, பெட்டிக்காப்பு — 160/-

செயலாளர்
ஆலய பரிபாலன சபை,
ஸ்ரீ சட்டநாதர் ஆலயம்.

26-10-1994

(33530)

---

இன்று முதல்!

## தீபாவளி மலிவு விற்பனை

★ கஸியோ (Casio)
★ சிற்றிசன் (Citizen)

கைக் கடிகாரங்கள்!

மலிவு விற்பனை!!

**01 - 11 - 1994** வரை

★ அல்டி ★

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9448)

---

## அந்தியேட்டி அழைப்பு



மலர்வு: 03 — 12 — 1930

உதிர்வு: 27 — 09 — 1994

**அமரர் தி. தங்கராஜா**

[Rtd. Explosive Irrigation Road Section – Overseer, O. I. C. (Assistant Officer)]

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் கொட்டிக்குளிப்பான் பிள்ளையார் கோயிலிலும் மதிய போசனம் அவரின் இல்லத்திலும் இன்று (27 – 10 – 1994) வியாழக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

''பாமா வாசா''
மாலி சந்தை,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

[33534]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## குண்டு வெடிப்பு தந்த மாற்றம்

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய ஜனாதிபதி வேட்பாளராக, கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பில் பலியான காமினி திஸாநாயக்காவின் மனைவி சிறிமா திஸாநாயக்கவே தெரிவு செய்யப்பட்டுள்ளார். கொலையுண்ட கணவருக்குப் பதிலாக மனைவி சிறிமாவை வேட்பாளராக நிறுத்துவதற்கு ஒருமனதாக முடிவு செய்யப்பட்டதாகவே ஐ. தே. கட்சி உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

ஆனால் இந்தத் தெரிவு அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்திய முடிவு என்றே சொல்லலாம். முற்றிலும் எதிர்பார்க்கப்படாத தெரிவு என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறின.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் போது, விஜேதுங்கா ஜனாதிபதியானதும் ரணில் விக்கிரமசிங்காவே பிரதமராக நியமிக்கப்பட்டார். கட்சியின் உப தலைவர்களில் ஒருவருமானார். ஆனால் விஜேதுங்கா மூலம் மீண்டும் ஐ. தே. கவுக்குள் புகுந்த காமினி, புதிய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும், கட்சி உப தலைவர் பதவியையும் தானே ''இறாஞ்சிக்'' கொண்டார்.

அதனால் காமினியின் மரணத்துக்குப் பின்னராவது ஐ. தே. கட்சியின் தலைமைத்துவம் ரணிலுக்கே கிடைக்கும் என அவதானிகள் பலமாக நம்பினர்; எதிர்பார்த்தனர். ஆனால் காமினியின் மனைவியே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இத்தெரிவுக்கு ரணில் விக்கிரமசிங்காவின் பெயரும், சிறிமா திஸநாயக்காவின் பெயரும் பிரஸ்தாபிக்கப்பட்டன என்றும், இறுதியில் சிறிமாவை நியமிக்கவே முடிவு செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமாவும் ஜனாதிபதி வேட்பாளராக முயன்று ஆதரவு திரட்டினார் என்றும் கூறப்பட்டது.

எப்படியோ, ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளரை முடிவு செய்வதற்காக கட்சியின் உயர் நிர்வாக பீடங்கள் காலை முதல் மாலை வரை பெரும் கஷ்டப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. அந்தக் கட்சிக்குள் பெரும் குழுச்சண்டை இருப்பதையும், உட்கட்சிப் பூசல் மலிந்துள்ளதையுமே இது எடுத்துக் காட்டுகிறது!

ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரையில் சந்திரிகா வெற்றியீட்டுவார் என்ற நம்பிக்கையே தெற்கில் பெரிதாக உண்டு. பொதுத் தேர்தலில் 48·94 வீத வாக்குகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்தன. அவற்றோடு மேலதிகமாக ஐந்து சத வீத வாக்குகளைப் பெற்றால் சந்திரிக்கா இலகுவில் வென்று விடுவார் என்று கருதப்படுகிறது.

ஆனால், பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த 44.04 சதவீத வாக்குகளுடன் 6.5 சதவீத வாக்குகளைப் பெற்றால் தாம் வெற்றிபெற முடியும் என்ற எண்ணத்துடனேயே காமினி செயற்பட்டார்.

தேர்தலுக்கு இரண்டொரு நாட்களுக்கு முன்னர் அந்தப் பக்கமா இந்தப் பக்கமா என்று தீர்மானிக்க முடியாமல் உள்ள மிதக்கும் வாக்காளர்களைக் கவர்ந்தால், தமக்கு வேண்டிய 50 சத வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்பது காமினியின் கணக்காக இருந்தது.

அவ்வாறு கணக்குப் பார்த்த காமினியின் இடத்துக்கு அவரது மனைவியை நிறுத்தினால், மிதக்கும் வாக்குகளை அனுதாப அலைமூலம் நிச்சயம் பெறலாம் என்ற நோக்கத்துடனும் ஐ. தே. கட்சி சிறிமாவைத் தெரிவு செய்திருக்கலாம்.

எப்படியோ தென்னிலங்கையில் அரசியல் உயர்குழாம் குறிப்பிட்ட குடும்பங்களுக்குள்ளேயே சுற்றி வட்டமிடுவது ஒரு பாரம்பரியமாகி விட்டது. அதனால் இரண்டு விதவைகளில் எந்த விதவையை ஜனாதிபதியாக்குவது என்று அப்பகுதி வாக்காளர்கள் நவம்பர் ஒன்பதில் முடிவு செய்வர். குண்டு வெடிப்பு உருவாக்கிய திடீர் மாற்றம் இது!

# ஜனாதிபதி வேட்பாளராக வர ஹேமாவும் முயற்சி செய்தார்

## சிறிமா திஸாநாயக்காவின் நியமனத்தில் அதிருப்தி

கொழும்பு, ஒக். 27
ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி ஹேமாவும் முயற்சி செய்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்கா, சிறிமா திஸாநாயக்கா ஆகியோரின் பெயர்களுடன் ஹேமாவின் பெயரும் வேட்பாளரைத் தெரிவு செய்த ஐ.தே.க நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டம் 5 மணி நேரம் நீடித்ததாகக் கூறப்படுகிறது.

1993 ஆம் ஆண்டு மேதினமன்று பிரேமதாஸா ஆமர் வீதிச் சந்திக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து அரசியலில் பிரவேசிக்க ஹேமா எடுத்து வந்த முயற்சிகளை கட்சியின் ஒரு பிரிவினர் முறியடித்தனர் என்பது தெரிந்ததே.

இப்போது குண்டுத் தாக்குதலில் ஜனாதிபதி வேட்பாளர் கொல்லப்பட்ட போது அவரின் மனைவியையே வேட்பாளராக நியமிக்க ஐ.தே.க. முடிவு செய்தது ஹேமா வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று சொல்லப்படுகின்றது.

(இ-எ)

## வாந்தி-பேதி மற்றும் ஒருவர் ஆஸ்பத்திரியில்

வாந்தி—பேதி நோயினால் பீடிக்கப்பட்டு நேற்று முன்தினமும் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி பொலிகண்டியைச் சேர்ந்த பொன்னையா அழகராசா (வயது 62) என்பவரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(இ-15)

# இலங்கை வங்கி வட்டி வீதம் மேலும் குறைப்பு

இலங்கை வங்கி தனது வட்டி விகிதத்தை எதிர்வரும் நவம்பர் முதலாம்திகதியில் இருந்து குறைக்க முடிவுசெய்துள்ளது.

இந்த ஆண்டில் இடம்பெறும் இரண்டாவது வட்டி விகிதக் குறைப்பு இதுவாகும்.

கடந்த பெப்ரவரியில் முதல் தடவையாக வட்டி விகிதம் குறைக்கப்பட்டது.

பணவீக்கத்தை ஓர் இலக்க அளவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டுக்கு உதவவே வட்டி வீதத்தை குறைக்க இலங்கை வங்கி முன்வந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

## நாவாந்துறை பகுதியில் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஒக். 27
அண்மையில் பெய்த மழையினால் நாவாந்துறைப் பகுதியில் சில வீடுகள் சேதமடைந்துள்ளன.

வீடுகள் சேதமுற்று இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு யாழ். பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-17)

## தலைவர் பிரபாவுக்கு
# படை அதிகாரியின் மனைவி கடிதம்

கொழும்பு, ஒக். 27
''அண்மையில் தாக்குதலுக்கு உள்ளான சாகரவர்த்தன கப்பலில் கடமையில் இருந்த இரண்டாவது ஆணையிடும் அதிகாரியான எனது கணவர் ஒ. கே. யு. ஒவிட்டிகலவை கருணையின் பேரில் விடுதலை செய்யுங்கள்''

இப்படி வேண்டுகோள் விடுத்து அவரது மனைவியான சன்தி ஒவிட்டிகல விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கடிதம் சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையம் (செடெக்) என்ற தொண்டர் நிறுவனம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

19-9-94 அன்று சாகரவர்த்தன கப்பலில் கடமையில் இருந்த இரண்டாவது ஆணையிடும் அதிகாரி ஒவிட்டிகல எனது கணவராவார்.

அவர் உங்களது படையினரின் பாதுகாப்பில் இருப்பதாக அறிகிறேன்.

எனதும், குழந்தையினதும் (வயது ஒன்றரை) ஒரே பாதுகாவலர் அவர். அவர் இல்லாததால் நாம் அநாதரவான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எனது குழந்தை நோயால் பீடிக்கப்பட்டுள்ளது.

குழந்தைப் பாசத்துக்கு மதிப்பளிக்கும் தந்தை என்ற ரீதியில் நீங்கள் தனிப்பட்ட மனிதாபிமான நோக்கோடு எனது குழந்தையை பற்றி சிந்திப்பீர்கள் என நம்புகிறேன்.

எம்மை இந்த அநாதரவான நிலையிலிருந்து விடுவிக்க உங்களால் மட்டுமே முடியும். எம்மீது கருணை காட்டி எனது கணவரை என்னிடம் அனுப்பி வைக்குமாறு உங்களை வேண்டுகிறேன்.

ஒரேயொரு தடவையாவது எனது குழந்தை அவரை பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தாருங்கள். எனது தயவான வேண்டுகோளை நிறைவேற்றுவீர்கள் என நம்புகிறேன்.

இப்படிக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-9)

## ஒப்பந்தத்தை மாற்றும்படி இ. தொ. கா. கோருகிறது

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பொதுத் தேர்தலுக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று இ. தொ. கா. கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்றை இ. தொ. காவின் பொதுச் செயலாளர் கடந்த வெள்ளியன்று ஐ. தே. க. பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்தார்.

இ. தொ. கா. எம். பிக்கள் தனிக்கட்சியினர் போன்று நாடாளுமன்றத்தில் இயங்கக் கூடிய விதத்திலே ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

(இ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 27
''யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடத்தப்படும் மாவட்ட விளையாட்டுப் போட்டியின் நான்காம் நாள் நிகழ்வாக இன்று வியாழக்கிழமைகாலை 7-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியும், பெண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டப் போட்டியும்நடைபெறவுள்ளன.

வலய ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்களையும், இன்று வியாழன் காலை 7-00 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்திற்கு சமூகமளிக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுள்ளது.

(இ)

## தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாவார்

யாழ்ப்பாணம், ஒக். 27
யாழ். மாநகராட்சி மன்றத்தில் பணிபுரியும் நூற்றுக்கும் மேற்பட்ட தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு யாழ். மாநகராட்சி மன்றம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான அனுமதியை வடக்கு—கிழக்கு மாகாணசபை, மாநகராட்சி மன்றத்துக்கு வழங்கியிருப்பதாக யாழ். மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

(இ-17)

## இன்று

மீசாலை அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய கலையரங்கு திறப்பு விழாவும் பரிசுத் தினமும் இன்று வியாழன் பிற்பகல் 2-00 மணிக்கு அதிபர் செல்வி இ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்து கொள்வார்.

(ஒ-117)

# சமாதான முயற்சிகளை தொடருமாறு பிரிட்டன் இலங்கையிடம் வலியுறுத்து

லண்டன், ஒக். 27
வன்செயல்களுக்கு மத்தியிலும் சமாதானத்தை காணும் முயற்சியை இலங்கை மக்கள் தொடர வேண்டும் என்று பிரிட்டன் கோரியுள்ளது.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் இலங்கை வெளியுறவு அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கையில் வன்செயல்கள் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காமினி திஸநாயக்காவும் மற்றும் பலரும் கொல்லப்பட்டதற்கு கவலை தெரிவித்த பிரிட்டிஷ் அமைச்சர், வன்செயல்களைக் கண்டித்தார்.

இச் சம்பவங்கள் இலங்கை மக்கள் சமாதானம் காணும் பாதையில் தொடர்ந்து செல்வதை தடம் புரளச் செய்துவிடாது என்றும் பிரிட்டிஷ் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

(இ-எ)

# ஆணைக்குழு நியமிக்க ஐ. தே. க. கோருகிறது

கொழும்பு, ஒக். 27
ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான காமினிதிஸநாயக்காவின் படுகொலை பற்றி விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

(இ-எ)

## காமினியின் கூட்டமேடையில் கிடந்த
## கமெரா படச்சுருள் மூலம் துப்புத் துலக்க முயற்சி

கொழும்பு, ஒக். 27
கிராண்ட்பாஸ் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த புகைப்படப் பிடிப்பாளர் ஒருவரின் கமரா, கூட்டமேடையில் கண்டு பிடிக்கப்பட்டது என்றும்—

அதனுள் இருந்த படச்சுருளை பொலீஸார் கைப்பற்றினர்என்றும் — கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அப்படச் சுருளில் கூட்டத்தில் மேடையின் முன்வரிசையில் அமர்ந்திருந்தவர்களின் படங்கள் உள்ளன என்றும் —

அவர்களை அடையாளங் காணுவதன் மூலம் கொலையாளியை இனங்காண முடியும் என்று பொலீஸார் நம்புவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அப்புகைப் படங்களில் காணப்படும் ஆண் ஒருவரையும் பெண் ஒருவரையும் அடையாளங் காணுவதன் மூலம்மனித குண்டாக செயல்பட்ட பெண் கொலையாளியை இனங்காண முடியும் என்று பொலீஸார் நம்புவதாக கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

(இ-எ)

# இளைஞன், யுவதியை பொலீஸ் தேடுகிறது

காமினி திஸநாயக்கா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஓர் இளைஞனையும் ஒரு யுவதியையும் பொலீஸார் தேடி வருகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனையில் உள்ள விடுதி ஒன்றில் இருவரும் தங்கியிருந்தனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சம்பவதினம் வவுனியா சென்று வருவதாகக் கூறி இளைஞன் புறப்பட்டுச் சென்றார் என்றும்—

சவூதி பயணம் போவதாகக் கூறி அந்த யுவதி சென்றார் என்றும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (இ-எ)

## ஒஸியின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடம்

கொழும்பு, ஒக். 27
கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த கொழும்பு மாவட்ட ஐ. தே. க. எம். பியான ஒஸி அபயகுணசேகராவின் தலையில் இரண்டு பாரிய அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் —

தொடர்ந்து அவரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# யுத்தம் இப்படியே தொடருமானால் பிற நாட்டுக்கு நாம் அடிமையாவோம்

## தியாக எண்ணமும் அர்ப்பணிப்பும் இரு தரப்பினருக்குமே அவசியம்

*16-10-94 ஞாயிறு 'லங்கா தீப' வார இதழில் வெளியான ஆசிரிய தலையங்கத்தின் சில பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன.*

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நோக்கில் பூர்வாங்க ஒழுங்குகளை மேற்கொள்ள அரச தரப்புத் தூதுக்குழு யாழ்ப்பாணம் சென்றது.

பத்தாண்டுகளுக்கு மேலாக நீடித்துள்ள இக்கொடிய யுத்தம் நிறுத்தப்படுவதற்கான நல்ல சமிக்ஞைகளை எதிர்பார்த்திருக்கும் பொதுமக்கள் இந்த நல்ல ஆரம்பத்தை ஆசீர்வதிப்பார்கள்.

### தியாக எண்ணம் அர்ப்பணிப்பு

எல்லாம் நன்மையாக அமைவதில்லை. அதேபோல் எல்லாம் தீமையாகவும் அமைவதில்லை. நன்மையோ தீமையோ இன்றி எவையும் இல்லை.

இருப்பினும் தீமைகளை அப்பழுக்கற்ற, நேர்மையான அர்ப்பணிப்புகளால் நன்மையாக்க முடியும். யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவருவது, இனப்பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பதற்கான சமாதானப் பேச்சுகள் வெற்றியடைவது இருதரப்பினரிடையே தியாக எண்ணங்களும் அர்ப்பணிப்புகளும் இருந்தால் மாத்திரமே சாத்தியமாக முடியும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது மக்கள் அளித்த தெளிவான தீர்ப்பு சமாதானத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் நிலைநாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதற்கான சான்றிதழாகும்.

தென்பகுதிச் சிங்களவர்கள் இனவாதத்தை வெறுக்கிறார்கள் என்பதே அந்தச் சான்றிதழாகும்.

சிங்கள வாக்காளர்களின் நெஞ்சங்களில் இனவாதத் [illegible] வாக்குகளைப் பெற முயன்ற [illegible] தீர்ப்பு சாட்டையடிபோல் அமைந்தது.

மக்கள் அவர்களை அருவருத்து ஒதுக்கினர். அதன் மூலம் பாடம்படிக்கத் தவறிய சிலர் இம்முறை ஜனாதிபதித் தேர்தலின்போதும் நீறுபூத்த நெருப்புப் போல் இருந்துவரும் இனவாதத்தை மீண்டும் தூண்டிவிட முயற்சிக்கிறார்கள் போல் தெரிகிறது.

தேசிய ஒற்றுமை, அமைதி நோக்கி காரியங்கள் நடைபெற்றுவரும் வேளையில் அதிகார ஆசைகொண்ட சந்தர்பவாத அரசியல்வாதிகள் இனவாதத்தை தூண்ட எடுக்கும் முயற்சிகளை மக்கள் அருவருத்து வெறுப்பர் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

### யுத்தம் ஒரு சாபக்கேடு

உலகப்படத்தில் ஒரு சிறு புள்ளிபோல அமைந்துள்ள ஸ்ரீலங்காவில் 10 ஆண்டுகளுக்கு மேல் யுத்தம் நடைபெற்றுவருவது ஒரு சாபக் கேடு என்று நினைப்பதற்கு தற்போதாவது எமக்குப் புத்திவரவேண்டும்.

யுத்தத்தால் ஏற்பட்ட கெட்டபெயர்களால் நாம் இன்று உலக மக்கள் முன் பிச்சைக்காரர்கள் போல் உருவாக்கப்பட்டுள்ளோம்.

எமது எதிர்காலப் பரம்பரையினரால்கூட திருப்பிச் செலுத்த முடியாதளவு உலகில் கடன்பட்டுள்ளோம்.

இந்த யுத்தம் இவ்வாறு மேலும் தொடருமாயின் ஸ்ரீலங்கா மீண்டும் ஏதாவது ஒரு நாட்டிற்கு அடிமையாகி பெரும்பாலான மக்கள் சுரண்டப்படக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த யுத்தத்தினால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனத்தவர்களுக்கு அழிவைத் தவிர வேறு என்ன பலன் கிடைத்தது? எல்லா இனங்களைச் சேர்ந்த மக்களும் ஆயிரக்கணக்கில் அகதி முகாம்களில் வாடுகின்றனர். அவ்வாறு துன்பப்படுவதற்கு அம்மக்கள் செய்த தவறு தான் என்ன?

இதுவரை ஆயிரக்கணக்கானோர் இறந்துள்ளனர். ஆயிரக்கணக்கில் ஊனமுற்றுள்ளனர். அழிவுற்ற சொத்துக்களுக்கும், செல்வங்களுக்கும் அளவே இல்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் அவரது ஆலோசகர்களும் இதன் யதார்த்த நிலையை அறிந்துள்ளனர் போல் தெரிகிறது.

யுத்தத்திற்குச் சார்பான துரோகிகளின் அபிலாஷைகள் நிறைவேற யுத்தம் அவர்களுக்கு அவசியமானதொன்றாகும். அவர்களுக்கு சர்வதேச வர்த்தகர்களின் அனுசரணைகள் கிடைக்கிறதா என்பதைக் கண்டறிவது அவசியம்.

தற்போது அபிவிருத்தி அடைந்துள்ள முன்னேற்றமான நாடுகள் தங்களது முக்கிய கைத்தொழிலாக படைக்கல உற்பத்தியை மேற்கொள்வதுடன் 'பாதைவஸ்து வியாபாரத்திலும் ஈடுபடுகின்றன.

உலக சனத்தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினர் உணவின்றியும் போஷாக்கின்றியும் அவஸ்தைப்படும் நேரத்தில் அம்மக்களின் மனிதாபிமான தேவைகளுக்கு எதுவித தியாகமோ, பரிகாரமோ காணாது ஆகுந்தி குறைந்தது அம்மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கூட வழங்காது படைக்கலங்களையும், போதைவஸ்தையும் வழங்க முற்படுவது வேதனைக்குரியது.

இந்தப் படைக்கல, போதைவஸ்து வியாபாரிகள் வளர்ச்சியடையாத நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களை வசப்படுத்தி அவர்களுக்கு கையூட்டுகளை வழங்கி தங்கள் தொழிலை விஸ்தரித்து வருகின்றனர்.

இந்த உபத்திரவத்திற்குள் சிறிலங்காவும் சிக்கியுள்ளது. இதைப்பற்றிக் கவலைப்படுவோர் யாருமில்லை. இந்நாட்டில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்த இந்த அரசியற் துரோகிகளுக்கு விருப்பமில்லை. ஆயுத வியாபாரத்தில் தாங்கள் வாழ்ந்து வர அவர்களுக்கு யுத்தம் அவசியமானதொன்றாகும்.

எத்தகைய இடையூறுகள் ஏற்படினும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியடைய வேண்டியது மிக முக்கியமானதாகும்.

பயங்கரவாதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் உலகில் எந்த நாட்டில் வெற்றியடைந்தது என இனவாதப் பண்டிதர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எல்லாளனின் தலையைச் சீவிய துட்டகைமுனுவின் வாளை இன்றுவரை தேடிக் கொண்டிருக்கும் இந்த இனவாதப் பண்டிதர்கள் இரியும் பாம்பும் போல் வைரிகளாக இருந்த இஸ்ரேலும், யாஸீர் அரபாத்தும் பேச்சுவார்த்தை மேற்கொண்டதையும் சமாதானத்தை உருவாக்கியதையும் அறிந்திருக்கவில்லை.

வடபகுதியில் பயங்கரவாதம் ஏன் தோன்றியது என்பதை இந்த இனவாதப் பண்டிதர்கள் அறியாவிட்டாலும் பொதுமக்கள் அறிவர். தென்பகுதியிலிருந்து சென்று யாழ்ப்பாண நூலகத்திற்கு தீ மூட்டியது ஒரு சிறு உதாரணம் மட்டுமே.

### எவராவது விட்டுக் கொடுக்க வேண்டும்

வடக்கில் பயங்கரவாதம் தோன்றியதற்கு காரணமாக அமைந்த வரலாற்றுச் சம்பவங்கள் ஏராளம்.

அவை பற்றிக் கவனம் செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் காலத்தால் மறைக்கப்பட்டிருக்கலாம். தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்தே நாம் ஆராய வேண்டும். தற்போதைய

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் வைகுந்தநாதன்

(ஓய்வுபெற்ற நில அளவையியலாள தலைமைப் பரிசோதகர்)

பருத்தித்துறை தும்பளை மேற்கைச் சேர்ந்த இராமலிங்கம் – வைகுந்தநாதன் 26 – 10 – 1994 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம்-செல்வமுத்து தம்பதிகளின் செல்வப் புதல்வனும், உருக்குமணியின் பாசக் கணவரும், கிருஷ்ணவேல் (பிரான்ஸ்) உருத்திரநாதன் (ஜேர்மனி), உஷா, சுவர்ணலதா, ஜீவா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜெயக்குமார், ஜெகதீஸ்வரன், சிவகுமார் (ஜேர்மனி), அன்பரசி ஆகியோரின் மாமனாரும், சிதம்பரநாதன், பாக்கியநாதன், பஞ்சநாதன், ஆனந்தநாதன், அரியமலர், தனசிகாபதி, திரௌபதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவரூபன், வரதராஜன், சிந்துஜா, சிவகபிலன், கஜேந்திரநாதன் ஆகியோரின் பேரனும் ஆவர்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 27 – 10 - 94 பிற்பகல் 2.00 மணியளவில் பருத்தித்துறை கோரியடி மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
திருமதி வை. உருக்குமணி
(மனைவி)

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.
(33531)

## தில்லையம்பலம் வைத்திலிங்கம்

சில்லாலை தெற்கை பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது 27/2, புங்கன்குளம் வீதியில் வசித்து வந்தவருமாகிய தில்லையம்பலம் வைத்திலிங்கம் நேற்று காலமாகிவிட்டார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலம் சென்ற திரு. திருமதி தில்லையம்பலம் தம்பதிகளின் அன்பு மகனும், விமலாதேவி (றஞ்சிதம்), காலம் சென்ற சிவயோகம் (தேவி), கிருஷ்ணபாலன் (ஆஸ்திரேலியா), திருக்குமார் (நோர்வே) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், காலம்சென்ற பரமலிங்கம், காலம் சென்ற பொன்னம்மா, அப்பாத்துரை (புளியங்கூடல்), இராசையா, காலம்சென்ற செல்லம்மா, திருநாவுக்கரசு (இரத்தினம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தியாகராசா, மகேந்திரன், புஷ்பகலாராணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், செல்லப்பா (கொழும்பு)வின் மைத்துனரும், சோதிப்பிள்ளையின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27-10-94 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. தியாகராசா
(மருமகன்)

(33537)

## வஸ்தியாம்பிள்ளை இராயப்பு

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய வஸ்தியாம்பிள்ளை இராயப்பு 24- 10- 94 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் மேரி லூசியாவின் அன்புக் கணவரும், சுதா (திருகோணமலை), ஆனந்த் (கனடா), அமுதா, சாந்தா, புனிதா (கொழும்பு), ஜெயந்த் (ஜெர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபைராஜன் (திருகோணமலை - ஆசிரியர்), சத்யன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீனா, [கபில் ஆகியோரின் அன்புப் பேரனும், அல்பிறெட், காலஞ்சென்ற லூர்த்தம்மா, றெஜீனா (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற புஸ்பம், செபஸ்தியாம்பிள்ளை, பீற்றர்வில்பிறெட் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 26- 10- 94 இல் கொழும்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
றெஜீனா பீற்றர் [ஆசிரியர்)
(சகோதரி)

163, சூருசோ றோட்,
யாழ்ப்பாணம்.
(7979)

## சுப்பிரமணியம் சிவலோகநாதன்

இலங்கை மின்சாரசபை, மின்விணைஞ்சன் சுன்னாகம் 26.10.94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், அன்புமலரின் அருமைக் கணவனும், குணாளினி, நம்சாளினி, கேசிகரன் ஆகியோரின் தந்தையாரும், செல்வராசா [காலஞ்சென்ற ஆசிரியர்], தம்பிராஜா [சின்னண்ணை] கனகரத்தினம் [ஓய்வுபெற்ற ஆசிரியர்], சரஸ்வதி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற ஞானேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், அராலி சுப்ரமணியம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஆனந்ததேவன் [கனடா], விஜயமலர் [கனடா] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [27.10.94] காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. கனகரத்தினம்
[ஓய்வுபெற்ற ஆசிரியர்]
[சகோதரன்]

ஐயனார் கோவிலடி,
சுன்னாகம்.
[7684]

## R. D. மயில்வாகனம்
(பொடித்தம்பி)
(Retired Valuation Inspecter)

25 – 10 – 94 இல் காலமான R.D. மயில்வாகனம் அவர்களின் இறுதிக்கிரியைகள் நேற்று 26-10-94 புதன்கிழமை நவிண்டில், கரணவாயில் நடைபெற்றதென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்;
திருமதி ம. நாகேஸ்வரி
(மனைவி)
ம. குகதாசன் (குகன்)
(மகன்)

(33538)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சாகரவர்த்தனா தகர்ப்புக்கு பின் மன்னாரில் பெரும் தாக்குதலுக்கு அரசு திட்டமிட்டிருந்தது

கொழும்பு, ஒக். 27

'சாகரவர்த்தன' கப்பல் தகர்ப்புக்குப் பின்னர் மன்னாரில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது பெரும் தாக்குதலை நடத்த படையினர் திட்டமிட்டிருந்தனர். எனினும் கடைசி நேரத்தில் ஒரு

### 'லக்பிம' சிங்களவார இதழ் தகவல்

தொலைபேசி அழைப்பு மூலம் இத்திட்டம் கைவிடப்பட்டது.

இவ்வாறு ''லக்பிம'' என்ற சிங்கள வார இதழ் தனது பாதுகாப்பு தகவல்கள் என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

சாகரவர்த்தன கப்பல் கற்பிட்டியில் தகர்க்கப்பட்டதை தொடர்ந்து கோபமடைந்த படையினர் மன்னார் முதல் கற்பிட்டி வரை உள்ள பகுதிகளில் புலிகளின் பலத்தை அழிக்கும் முயற்சிக்குத் திட்டமிட்டனர்.

சிலாவத்துறை, அரிப்பு, பகுதியில் உள்ள கடல்புலிகளின் முகாம்களையும்—

வில்பத்துக் காட்டிலுள்ள புலிகளின் முகாமையும்— அழிப்பதற்கு ஏற்றவாறு பாரிய ராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் அனுமதி கோரப்பட்டது.

அனுமதி கிடைத்ததும் இரண்டு நாட்களில் மன்னாரை சுற்றிய பகுதிகளிலுள்ள படை முகாம்களில் படையினர் குவிக்கப்பட்டனர்.

கொழும்பிலிருந்து வந்த விசேட பொறியியலாளர் குழு ஒன்று மன்னார் முகாம்களிலிருந்த சீன தயாரிப்பு கவச வாகனங்கள், டாங்கிகள் என்பனவற்றை மறுசீரமைக்கத் தொடங்கியது.

வான் படையினர் 500 கிலோ எடையுள்ள குண்டுகளை வீசுவதற்கு ஆயத்தம் செய்தனர். இவ்வாறான பாரிய குண்டுகள் இந்த தாக்குதலில்தான் முதலில் பாவிக்கப்பட இருந்தன.

கடற்படையிலும் விசேட படையணிகள் தயார்படுத்தப்பட்டன. ஒக்ரோபர் முதல் வாரத்தில் இந்தப் பாரிய தாக்குதல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

ஆனால் இறுதி நேரத்தில் முப்படைத் தளபதிக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளதால் மன்னார் தாக்குதலை உடன் நிறுத்தவும் என உத்தரவிடப்பட்டது.

இப்படி 'லக்பிம' கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

### படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் வவுனியா கல்மடுவைச் சேர்ந்த முத்துமாணிக்கம் சிவப்பிரகாசம் (34 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

கல்மடுவில் இருந்து சோழியாகுளம் பகுதிக்கு வேலைக்காக சென்று தங்கியிருக்கும் இவர், வீட்டின் பின்பக்கம் சிறுநீர் கழிப்பதற்காகச் சென்றவேளையே இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாக தெரிவித்தார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

### ஐ.தே.க....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தர்மசிறி சேனநாயக்கா நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஐக்கியதேசியக் கட்சியின் இந்த குற்றச்சாட்டை பொ.ஐ.மு அரசு முற்றாக மறுக்கிறது என்றும் அவர் கூறினார்.

காமினி திஸாநாயக்காவுக்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த மறுத்தார். (ஒ-எ)

### அரசு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தர்.

காமினி திஸாநாயக்கா இத்தேர்தலில் வெற்றியடைந்துவிடுவார் என்று உணர்ந்து, அரசுக்குஉதவும் வகையில் விடுதலைப்புலிகள் காமினியை படுகொலை செய்துவிட்டனர் என்றும் ஜனாப் முகமதுவும் ஏனைய முக்கிய ஐ.தே.க. தலைவர்களும் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஒ-எ)

### புலிகளிடம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ந்துளளனர்.

கடற்புலியிடம் உள்ள புதிய ரக அதிவேகப் படகை இலக்கு வைத்து தாக்குவது கடற்படை துப்பாக்கி வீரருக்கு மிகவும் கஷ்டமான காரியமாகும்.

இதனால் கடற்புலிகளிடம் இருந்து வரும் அச்சுறுத்தலை தடுத்து நிறுத்த மாற்றுத்திட்டம் ஒன்றை உருவாக்குவதில் கடற்படையின் கொள்கை வகுப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிகிறது.

—இவ்வாறு அப்பத்திரிகையின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யுத்த...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யதார்த்த நிலையிலிருந்தே தீர்வினைக் காணவேண்டும்.

பேச்சுவார்த்தை வெற்றியடைய வேண்டுமாயின் பேச்சுவார்த்தையின் போது யாராயினும் சரி விட்டுக்கொடுக்க முன்வர வேண்டும். அகில இலங்கை மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் விதத்தில் பேச்சுவார்த்தைகள் வெற்றியடைய வேண்டுமென நாம் வாழ்த்துகிறோம். (ஐ-10)

### திருத்தம்

நேற்றைய (26-10-94) உதயன் ஆறாம்பக்கத்தில் பிரசுரமான—

R.D மயில்வாகனம் (பொடித்தம்பி) அவர்களின் மரண அறிவித்தலில்—

அவரது சகோதரர்களில் ஒருவரான காலஞ்சென்ற

தா. இராமலிங்கம் [முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்]

அவர்களின் பெயர்—

காலஞ்சென்ற தா. இராசலிங்கம் என்று தவறுதலாக [illegible] விட்டது. திருத்தி வாசிக்கவும்.

# யாழ். அரச ஆஸ்பத்திரிகள் பலவும் விரைவில் செயல் இழக்கும் ஆபத்து

## கொழும்புக்கு அவசர செய்தி

யாழ்ப்பாணம். ஒக். 27

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகள் பல செயல் இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் அரச சேவையில் பணியாற்ற முடியாது என்ற புதிய அரசின் உத்தரவின் பேரில் —

யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில டாக்டர்கள் உட்பட சுகாதார சேவை அதிகாரிகள் 18 பேர் ஓய்வுபெற ஒரு மாத காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளதாலேயே இந்த நிலை உருவாகி உள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு ஏற்பட்டுள்ள இந்த ஆபத்துக் குறித்து கொழும்பில் உள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அவசர செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் இந்த அவசர செய்தியை யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் நேற்று அனுப்பி வைத்தார்.

அறுபது வயதுக்கு மேற்பட்டோர் ஓய்வுபெற வேண்டும் என்ற உத்தரவின் கீழ்—

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த டாக்டர்கள்— 3 பேர், பல் டாக்டர்—ஒருவர், உதவிவைத்திய அதிகாரிகள் — 4 பேர், பொது சுகாதார பரிசோதகர்கள் — 8 பேர், ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் — ஒருவர், சுகாதாரப் போதனாசிரியர்— ஒருவர் ஆகியோர் அடுத்த மாதம் 15 ஆம் திகதியிலிருந்து ஓய்வுபெற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் இடங்களுக்கு புதியவர்களை நியமிக்கும் வரை தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்க வேண்டும் —

அல்லது புதியவர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் —

இல்லைபேல் இங்குள்ள பல வைத்தியசாலைகளை மூட நேரிடும் — என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டுள்ளது. (அ-4)

# ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐ.தே.க. தலைமைத்துவம் ரணிலிடம்!

கொழும்பு, ஒக். 27

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐ.தே.க. தலைமைத்துவம் ரணில் விக்கிரமசிங்கா மீது சுமத்தப்படும் வாய்ப்பு உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அரசின் ஆயுட்காலத்தின் பின்னர் அரசியல் தலைமையைப் பெறுவதற்கான போட்டியில் ஈடுபட ரணில் தயாராகி வருவதாக அவரது நெருங்கிய நண்பர்கள் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சித் தலைமை மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் ஆகியவற்றில் ரணில் ஒதுக்கப்பட்டபோது, அவர் தமது ''காலம்'' இன்னும் வரவில்லை என்று தமது நெருங்கிய நண்பர்களிடம் கூறி வந்தாராம்.

தம்மிலும் பார்க்க வயது கூடியவர்களின் ஆட்சி நடப்பதால் தாம் சிறிதுகாலம் பொறுத்து இருக்க வேண்டும் என்றும் ரணில் கூறியிருந்தாராம்.

காமினியின் படுகொலையை அடுத்து ரணில் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதில் இருந்து, அரசியலில் ரணிலுக்கு உரிய காலம் வந்துவிட்டதாக தெரிவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (ஒ-எ-6)

### காமினியின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கம் என்ற வகையில் இக்கொலைச் சம்பவத்துக்குப் பின்னால் நின்றதா என்பதை நிறுவியாகவேண்டும். ஆனால் அதனைச் செய்வது கடினமானது.

ஏனெனில் இந்தச் சம்பவத்தில், இது ஒரு சதி நிகழ்ச்சி என்ற அம்சம் உண்டு. எனவே அந்தச் சதியை ஆதாரபூர்வமாக ருசப்படுத்திய பின்னரே தீர்க்கமான இறுதியான முடிவுக்கு வர முடியும்.

மேலும்—

சம்பவம் நடந்து மூன்று நாட்களே ஆகின்றன. கொலையை நிருபிப்பதற்கு நேரடி ஆதாரங்கள் இருந்திருப்பின் கொலையாளியார், எவ்வாறு இச்செயலைச் செய்தார் என்பதனை நிறுவியிருக்க முடியும். ஆனால் இங்கே நேரடி அத்தாட்சிகள் எதுவும் இல்லை.

எங்களுக்குக் கிடைத்த சில தடயப் பொருள்களை வைத்தே நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

தற்கொலையாளி தனது உடம்பில் குண்டு ஒன்றை பொருத்திக் கொண்டு வந்து வெடிக்க வைத்திருக்கிறார் என்ற அடிப்படையிலேயே எமது விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

இதுவரை நாம் ஒரு மண்டை ஓட்டையும், சில எலும்புத் துண்டுகளையும், சதைத் துண்டங்களையுமே எடுத்துள்ளோம்.

கைப்பை ஒன்று நகத்துக்குப் பூசும் மை, சிறு வயர் துண்டு ஆகிய சிறிய பொருள்களையும் கண்டெடுத்துள்ளோம்.

இவை எல்லாம் ஒருவருடையனவே என்பதனை முதலில் நிறுவ வேண்டும். அதன் பின்னர் இவை நாம் சந்தேகிக்கும் தற்கொலையாளியின் உடையவை என்பதை நிறுவியாக வேண்டும்.

நாம் கண்டெடுத்த தடயங்கள் யாவும், நாம் சந்தேகிக்கும் தற்கொலையாளியினுடையவையே என்று நிறுவும் வரை இதில் சம்பந்தப்பட்ட [illegible] என்பதைக் கண்டறிய முடியாது [illegible] அதிபர் கூறினார். [அ]

### ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடத்தப்படும் மாவட்ட விளையாட்டுப் போட்டியின் ஐந்தாம் நாள் நிகழ்வாக நாளை வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான பத்தாயிரம் மீற்றர் ஓட்டப்போட்டிகள் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளுக்கு, வலய ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்திற்குச் சமூகமளிக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. [இ]

### தந்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரர்களான ர. ஞானசிலன் (வயது 9), ர. மரிஸ்ரெலா (வயது 3) ஆகியோரே காயமடைந்த ஏனையவர்கள் ஆவர்.

ஆறு பிள்ளைகளில் ஒருவர் ரியூஷனுக்கும் ஒருவர் தாயாருடன் கோவிலுக்குச் சென்றதால் இந்த விபத்தில் இருந்து அவர்கள் தப்பினர்.

தந்தையாரும் வீட்டில் இருந்த ஏனைய மூன்று பிள்ளைகளுமே காயம் அடைந்தனர்.

நீண்ட நாட்களுக்கு முன்னர் அப்பா எடுத்துவந்து அலுமாரி மேல் வைத்த வாழைப்பொத்தி போன்ற ஒரு பொருளை (ஷெல்) எடுத்து அம்மா சிறுவனிடம் விளையாடக் கொடுத்ததாகவும் சிறுவன் அதனை நிலத்தில் குத்தியபோது அது வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயம் அடைந்த தந்தையாரும் மூன்று பிள்ளைகளும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

#### பிளாம்பயான் கப்பலுக்கு பதிலாக

# கோமாரியில் தபால்கள் எடுத்துச் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 27

'கோமாரி' கப்பலில் வெளியூர் தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. இதற்கு ஏதுவாக இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு முன்னதாக யாழ் பிரதம தபாலகத்தினுள் அமைந்திருக்கும் தபால் பெட்டியில் தபால்களைச் சேர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

வாராந்தம் பிளாம்பயான் கப்பலில் அனுப்பிவைக்கப்படும் தபால் பொதிகளுக்கு மாற்று ஏற்பாடாகவே கோமாரி கப்பலில் தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்படுவதாக யாழ் பிரதம தபாலதிபர் திரு.சு.கோமேஸ்வரன் தெரிவித்தார்.

### சட்டக் கல்லூரி அனுமதி பரீட்சை

சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 3 ஆயிரம் பரீட்சார்த்திகளுக்குமான அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை 22 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

### இன்று

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்களான திருவாளர்கள் க.பசுபதி, ஐ.சிங்கராஜா ஆகியோருக்கான பாராட்டுவிழா இன்று வியாழன் காலைபாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு.சு.லோகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-69)

# மரண அறிவித்தல்

## திருமதி தியாகராசா தங்கம்மா

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உடுவில் சுவாமி ஞானப்பிரகாசர் வீதியில் இடம் பெயர்ந்து வசித்துவந்தவருமான திருமதி தியாகராசா தங்கம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் வைரமுத்து சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் நேசப் புதல்வியும், சித்த வைத்தியர் அமரர் பெரியதம்பி தியாகராசாவின் (இணுவில் கட்டைப்பரிகாரி) அன்பு மனைவியாரும், திருமதி சந்திரமணிதேவி (ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர், தெல்லிப்பழை சித்த வைத்தியர்), தெட்சணாமூர்த்தி (நோர்வே), ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு.தி.சி. முத்துலிங்கம் (மாவட்ட விவசாய பெரும்பாக உத்தியோகத்தர், வவுனியா), திருமதி கமலாம்பிகை (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், நிறைஞ்சனா, விஜயராகவன், கிருபாலினி (நோர்வே), ஜெனனி (நோர்வே), சயந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-10-94) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுவிலில் இருந்து தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. விஜயராகவன்
[பேரன்]

சுவாமி ஞானப்பிரகாசர் வீதி,
உடுவில்.
[33539]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org